
# திருக்குறளில் அறிவியல்

புலவரேறு இரா.இளங்குமரனார்



# திருக்குறளில் அறிவியல்

முதுமுனைவர்

**இரா. இளங்குமரன்**

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.

தொலைப்பேசி: அலுவலகம் : 2345971 வீடு : 2560517

ஈமெயில்: meenakshiputhakam@hotmail.com

முதற் பதிப்பு : டிசம்பர், 2009

உரிமை ஆசிரியர்க்கு

மீனாட்சி 292

விலை ரூ. 35.00

## நூல் விளக்கப் பட்டியல்

| | |
|---|---|
| நூலின் பெயர் | திருக்குறளில் அறிவியல் |
| ஆசிரியர் | இரா. இளங்குமரன் |
| நூலின் தன்மை | பொழிவுக் கட்டுரைகள் |
| தாளின் தன்மை | வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | கிரௌன் |
| அச்செழுத்து அளவு | 11 புள்ளிகள் |
| மொத்தப் பக்கங்கள் | 96 |
| விலை | ரூ . 35.00 |
| நூல் கட்டுமானம் | அட்டைக் கட்டு |
| ஒளி அச்சு | ஆதவன் பிரிண்டர்சு |
| அச்சிட்டோர் | *மோனார்க் கிராபிக்ஸ்* |

**MEENAKSHI PUTHAKA NILAYAM**

48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.

☎ Off : 2345971 Resi : 2560517

E-Mail: meenakshiputhakam@hotmail.com

# எண் பொழிவுகள்

மதுரை வடக்குமாசி வீதி. பெரியார் மணியம்மை பள்ளியில் புரட்சிக் கவிஞர் மன்றச் சார்பில் பெருந்தகைத் தொண்டர் பி.வரதராசனார் ஏற்பாட்டில் யான்பொழிந்த எண்பொழிவுக் கட்டுரைகள் இவை.

எண் தலைப்புகளின் பொழிவு எனினும் இவற்றின மூன்றாம் பொழிவுத் தலைப்பான திருக்குறளில் அறிவியல் என்பதன் பெயர் கொண்டு நூலாக்கம் பெற்றது இது.

ஒரு காலத்தில், 'பிரசங்கமாய்', 'பெருஞ் சொல் விளக்கமாய்' பின்னே, 'சொற்பொழிவாய்' அமைந்த முறையது இக்கலைச் சொல்.

தம் பொழிவை நூலாக்கிய தமிழ்த் தோன்றல்கள் திரு.வி.க, மறைமலையடிகள்! அவர்கள் நூல்கள் எல்லாம் பொழிவுகள்! பொழிவுகளே நூல்கள்! கற்பனைப் பொழிவாக மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார் செய்தது வள்ளுவம்.

என் இளமைப் பருவம் தொட்டே பெரிதும், எழுதியதைப் பொழிவதும், பொழிவதை எழுதுவதும் வழக்காயிற்று. பொழிவும் எழுத்தும் அப்படி அப்படியே நடை கொளா! பொழிவில் விளக்கமும் எடுத்துக்காட்டும் சூழலும் இணையும். எழுத்தில் செறிவு கட்டமைவு ஆயவை மிகும். இவற்றால் பொழிவு கேட்டவர்க்கும் புது நூல் பயிலும் உணர்வும் சிந்தனைப் பெருக்கும் ஆம்.

இப்பொழிவு நூலை எழுத்து நூலாக்கி வெளியிடும் பெருமையர் மதுரை மீனாட்சி புத்தக நிலையத்தார் அவர்களுக்கும், புரட்சிக் கவிஞர் மன்றத்தார்க்கும் யான் பொழிவுக்கு மதுரை வரும் போதெல்லாம் ஏந்தாம் அனைத்தும் செய்யும் என் மகனார் இளங்கோ, பேரர் செல்வக்குமார் ஆகியோர்க்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

பொழிவுதோறும் தவறாமல் வந்த பெருமக்கள், தலைமையேற்றோர், வரவேற்றோர், நன்றியுரைத்தோர், பணி நலம் பாலித்தோர், கருத்துரைத்தோர், பரிசும் பாராட்டும் வழங்கினோர் ஆயோர்கெல்லாம் யான் என்ன செய்ய வல்லேன்!

"உங்கள் ஆர்வமும் அரவணைப்பும் இத்தகு பணியை மேலும் மேலும் ஊக்கும் உயர்த்தும் உதவும்" எனப் பாராட்டி மகிழ்கிறேன்.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"

என்பது வள்ளுவம்!

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்,

இரா.இளங்குமரன்.

## உள்ளுறை


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | திருக்குறளில் அறம் | 5 |
| 2. | திருக்குறளில் அறிவு | 15 |
| 3. | திருக்குறளில் அறிவியல் | 28 |
| 4. | திருக்குறளில் கலைச்சொல் | 47 |
| 5. | திருக்குறளில் பெண்மை | 64 |
| 6. | திருக்குறளில் உடைமை | 73 |
| 7. | திருக்குறளில் ஒப்புரிமை | 79 |
| 8. | திருக்குறளில் செயல் வீறு | 89 |

# திருக்குறளில் அறம்

அறம் என்பது பற்றிப் பலப் பலர் பார்வையும் வெவ்வேறு பட்டவை. எனினும் பிறர்க்கு உதவுதல் என்னும் பொது ஊடகம் கொண்டவை.

புத்தர் மொழிந்த தர்மம் அறம் எனப்பட்டது. வழிபடு பொருளாகக் கொள்ளப்பட்டமையால், "புத்தம் சரணம் கச்சாமி", "தன்மம் சரணம் கச்சாமி", "சங்கம் சரணம் கச்சாமி" எனப் போற்றி வணங்கப்பட்டது. அவர் அறவுரை 'அறவாழி' என்றும் 'தருமசக்கரம்' என்றும் அசோகரால் பரப்பப்பட்டது.

புத்தரும் அருகரும் அறவர் எனவே பாராட்டப்பட்டனர். மணிமேகலையார் அறவண அடிகளைச் சார்ந்தே அருளுரை பெற்றார். வைதிகர்களால் அறம் கொள்கை நிலையை விட்டுக் கொடை நிலைக்கு வந்தது. இன்ன இன்ன கொடுத்தல் அறம் என எண்ணி முப்பத்திரண்டு என்றும் வழக்கில் ஊன்றியது. இறைவி அறம் வளர்த்த நாயகி (தருமாம்பாள்) எனவும் வழக்கில் ஊன்றியது. **கொடை வகையால் எண்ணும் அறம் வரம்பற்றது; கட்டற்றது; முழுமை தழுவாதது.**

அறம் செய விரும்பு என்னும் ஔவையார் மொழி நல்லது செய்ய விரும்பு என்பதாயிற்று. ஒன்றை நல்லதாய்ச் செய்ய வேண்டுமானால், **செயலுக்கு மூலம் எது என எண்ண வேண்டும். செயலுக்கு மூலம் எண்ணம்** என்பது வெளிப்படை. அதனால், வள்ளுவர் கண்ட அறம் அதன் மூலநிலையில் இருந்தே கிளர்ந்தது.

செய்யுமுன், சொல்லுமுன் அறம் எங்கே உறைந்திருந்து கிளர வேண்டும் எனின், மனத்தில் இருந்தே கிளர வேண்டும். அவன் எண்ணமே அவன் சொல்லுக்கும் செயலுக்கும் மூலம்; ஆதலால், மன் + அம் = மனம் எனப்பட்டது. ஒருவன் தன் சொல்லும் செயலும் அழியாப் புகழுக்கு இடமாக இருக்க வேண்டியது மனமே என்பதாம்.

'மனம் போல வாழ்வு' என்பது மக்கள் வழக்கு மொழி! "மனம் உண்டானால் வழியுண்டு" "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே" "எண்ணித் துணிக கருமம்" என்பனவெல்லாம் பெருவழக்காகப் பேசக் கேட்கின்றோம்.

வள்ளுவர் முப்பாலாகப் பாடினார். அதில் முதற்பால் 'அறம்'; ஆனால் அங்கேயே அறம் அடங்கியதாக வள்ளுவர் கொண்டாரல்லர்! **முப்பாலும் கூடிய முழுமையுமே அறமே** எனக் கொண்டே நூல்யாத்தமையால், நூலுக்கே அறம் எனப் பெயர் பண்டே ஏற்பட்டது. புறநானூறு, **'அறம் பாடிற்று'** என்றது திருக்குறளையே யாம்.

அறத்தில் அறமும், பொருளில் அறமும், காமத்தில் அறமும் இல்லாமல் போதல் ஆகாது. **எதிலும் எவற்றிலும் அற ஊடகம் கட்டாயம் இருந்தாக வேண்டும்** என்பதால் தான் நூலுக்கே அறம் எனப் பெயர் அமைக்கப்பட்டது.

வள்ளுவர் கண்ட இறைமைக் குருவநிலை முதற்சான்று என நிற்கின்றது. அது **அறவாழி அந்தணன்** என்பதாம்! அறவாழியாவது அறக்கடல்! அறச்சக்கரம்! ஆதலால் ஆட்சியும் அறமாக வேண்டும், முறை மன்றம் அறமன்றமாக அமைய வேண்டும், வாழ்வே அறமாகிவிட வேண்டும் என்னும் ஆழிய நோக்கு வள்ளுவர்க்கு இருந்தமையால் தான் பாயிர நிறைவாம் நான்காம் அதிகாரத்தை **அறன் வலியுறுத்தல்** என்றார்.

வள்ளுவர் கூறுவன எல்லாமும், வலியுறுத்தும் வாய்மை **யறங்களேதாம்.** எனினும், **வலியுறுத்தல்** பெயர் கொண்ட அதிகாரம் அறம் என்னும் ஒன்றேயாம் என்பதை எண்ணுதல் வேண்டும்! அறம் ஒன்றை வலியுறுத்தினாலேயே மற்றவற்றையெல்லாம் வலியுறுத்திய தாகிவிடும் என்றே வள்ளுவர் கருதினார் என்பது புலப்படும்.

அறம் எண்ணத்தில் இருந்தே தொடக்கமாக வேண்டும் என்பதால்,

"**மனத்துக்கண் மாசிலன் ஆதல்** அனைத்தறன்."

என அறத்தின் இலக்கணத்தை உரைத்தார். மனமாசின்மையாம் அறமே எல்லா அறங்களுமாம் என்பதை 'அனைத்து அறன்' என்றார். அனைத்து என்பதற்கு, 'எல்லாம்' என்னும் பொருளொடு, 'அவ்வளவு' என்னும் பொருளும் உண்டு. எவ்வளவு மனத்தூய்மை உண்டோ அவ்வளவு அறம் உண்டு என்றும் எண்ண வைக்கிறார்.

நூற்றுக்கு நூறும் அறவராக முடியவில்லை எனினும் இருபதாய் முப்பதாய் அற விழுக்காடு உடையவரும் அறுபதாய் எழுபதாய் விரிய முழுமதி போல் முழுமையுற முடியும் என ஊக்குகிறார்.

இனி எண்ணலாம் : உலகியலை நோக்கினால் எத்தனை எத்தனை அறக்கேடுகள்! எத்தனை எத்தனை பொய்மை, களவு, புரட்டு, பொறாமை, கொலை. எல்லாவற்றின் மூலமும் எது? மனம், மனமே!

மனம் மாசு அற்றதாய் இருந்தால் மற்றை மாசு எதுவும் தோன்ற மாட்டாது. மனமாசே எல்லாக் குற்றங்களையும் உண்டாக்குகின்றது.

அளவிலே, நிறையிலே, குறையும் கலப்படமும் ஏற்படுவது ஏன்?

கல்வி கடைச்சரக்கிலும் கடைச் சரக்காய் - கயமைக்கு இடமாய்ப் போகியது ஏன்?

கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் வேறுபாடு இல்லாமல் குற்றம் குறைகள் பெருகியது ஏன்?

துறவர் மடங்களும் திருக்கோயில்களும் தூய்மைக் கேட்டின் இருப்பிடமாய்ப் போயது ஏன்?

பண்பட்ட சான்றோர்களால் தோற்றுவிக்கப்பட்ட சமயங்கள் சாய்க்கடையில் சாய்க்கடையாய் ஆவது ஏன்?

சிந்தனை, பகுத்தறிவு, மாந்த நேயம் என்பவற்றுக்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள் நாளொரு கோலமும் நலப்பாடில்லா உடைவுகளும் கொண்டுவருவது ஏன்?

வீட்டுக்குள்ளும் தொழிலுக்குள்ளும் அமைப்புக்குள்ளும் கட்சிக்குள்ளும் ஆட்சிக்குள்ளும் நாட்டுக்குள்ளும் நாடுகாவற்படைக் குள்ளும் கற்று வல்ல சான்றோர் அவைக்குள்ளும் உட்பகையும் காட்டிக் கொடுக்கும் கீழ்மையும் அமைந்து தற் கொல்லிகளாய்த் தழைப்பது ஏன்?

மனம் தூய்மையுற வில்லை!
இனம் தூய்மையுற வில்லை!
கல்வி தூய்மையுற வில்லை!
செயல் தூய்மையுற வில்லை!
தொண்டும் துறவும் தூய்மையுறவில்லை!

இத்தூய்மை இன்மைகளே எல்லா அழிசெயல்களுக்கும் அடிப்படை என்பதாலேயே மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் என்றார் அறவாழியாம் வள்ளுவப் பெருமகனார்.

மனம் தூய்மை பற்றிக் கூறிய திருவள்ளுவர் எத்தூய்மைகளை எல்லாம் சுட்டுகிறார்.

"மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம் தூய்மை தூவா வரும்."

என்றார்.

"கற்க கசடறக் கற்பவை" என்பதால் மனத்துண்டாம் கசடுகளை நீக்குவதே கல்வி என்கிறார்.

தவத்தவர் தூயராதலைத் "தவமும் தவமுடையார்க்கு ஆகும்." என்றார். "மனத்தது மாசற வாழ்வாரே துறவர்" என்பதைக் கூடா ஒழுக்கத்தில் விரியக் கூறுகிறார். வஞ்ச மனமும் படிற்று ஒழுக்கமும் துறவுக்கு உறவாகக் கூடாதவை என்கிறார்.

துறவே அறமென்று பவுத்தமும் சமணமும் கூறிவரும் நிலையில்,

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை"

என்கிறார். இன்பம் என்பது அறவழி வருவதே என்பதை,

"அறத்தான் வருவதே இன்பம்"

என்கிறார். துறந்தாரைக் காக்கக் கடமைப்பட்டவன் இல்வாழ்வானே என்பதைத்,

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

என்கிறார். இல்வாழ்வான் இல்லையேல் துறவி எப்படித் தோன்றுவான்! ஆதலால், துறவரைத் தந்தவன் தூய இல்வாழ்வன் தானே! அவன் தந்த வாழ்வு அன்றிப் பிறவாழ்வு எனலாமா?

தொண்டே வாழ்வாகக் கொண்டாலும் அத்துறவரை உணவால், உடையால், உறையுளால், பேணலால் காப்பான் எவன்? அவன் இல்லையேல் துறவு வாழ்வு என்னாம்?

'மாசிலா மனமே அற நிலையம்' எனக் கண்ட வள்ளுவர், அவ்வற நிலையத்தின் அழிபாடாய் இருப்பவையும் அம்மனத்திலேயே இருப்பதை உய்த்தறிகிறார். அறம் உய்யவேண்டுமானால் அறக் கேடாய் அமைந்தவற்றை அகற்றாமல் - அழிக்காமல் - இயலாது என்னும் தெளிவினராய்,

"அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்."

என்கிறார்.

மாசிலா அறம் முளைத்துத் தளிர்க்கும் இடத்தேயே தோன்றும் களைகள் பொறாமை, ஆசை, கோவம் கொடுஞ்சொல் என்னும் நான்கும் என்பதைத் தெளிகிறார். களை வெட்டுதல் உழவன் கடமை; 'இளைதாக முள்மரம் கொல்லுதல்' ஆட்சியர் கடமை என்பது போல் மனமாசுகளை அகற்றுவதல் அறத்தவர் கடமை என்கிறார்.

இந்நான்கும் முட் செடிகள்!

பொறாமை, பிறர் நலமாக இருப்பதை ஒப்பாதமனம், நன்மனம் ஆகுமா? அறமனமாகுமா? அவன் நன்றாக இருப்பதால் இவனுக்கு வந்த கேடென்ன? நீயும் நன்றாக இருக்க அவனைக் குருவனாக - வழிகாட்டியாகக் கொள்ளல் அன்றோ கடமை. அல்லது உன் பொறாமை உன்னை வெதுப்புதல் அல்லாமல் அவனை ஏதாவது செய்துவிடுமா?

ஆசை இருக்கிறதே! "ஆசைக் கோர் அளவில்லை"

"ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்."

ஆசு என்பது என்ன? குற்றம்! ஆசை என்பதன் பொருளே குற்றம் என்பது தான்! அது குணம் ஆகிவிடுமா? அவர்கள் நலமாக - வளமாக வாழட்டும் என ஆசை கொள்ளலாமே! கொண்டால் அவர்கள் பாராட்டும் பரிவும் பெறலாமே! ஆக்க ஆவலைக் கெடுத்து அழிவு ஆசையைப் போற்றுவது அறிவுடைமை தானா?

இனி, 'சினம்' என்பது என்ன? சின்னது, சின்னத்தனமானது என்பது தானே பொருள். 'சினம்' பெரியதாய் - பெருமையதாய் - எவராலும் போற்றப்படுமோ? போக்கற்ற வகையில் அமைதிக்காக வேண்டுமெனில்

"கோவம் இருக்கும் இடத்தில் தான் குணம் இருக்கும்" என்று சொல்லிக் கொள்ளலாம்! சின்னத் தனம் சின்னத் தனமே தான். என்ன பெரிய தன முத்திரை வைத்தாலும் அதன் முகம் அதுவேதான்!

சினம் கொண்டவர் முகத்தைப் பாருங்கள்! துடிப்பைப் பாருங்கள்! கொதிப்பைப் பாருங்கள்! சொல்லைக் கேளுங்கள்! செயலைக் காணுங்கள்! விடாமல் படமெடுத்து விடுங்கள்! சினமாறி - அமைந்து விட்ட போதில் அப்படங்களை அவரிடமே காட்டுங்கள்! அவர் தோற்றமும் செயலும் அவர்க்கே அருவறுப் பாகாமல் இராவே!

சினம் என்பது என்ன?

சேர்ந்தாரைக் கொல்லி!

சேர்ந்தாரைக் கொல்வன இரண்டு; ஒன்று தீ; இரண்டு நஞ்சு; இவ்விரண்டும் ஓருருக் கொண்ட சேர்ந்தாரைக் கொல்லி சினம்;

சின வெளிப்பாடு கொடுஞ்சொல்லாம் இன்னாச் சொல்! சொல் என்பது தீ! வடுப்படுத்தி வைக்கும் கொடு நெருப்பு!

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு,

வடுவாக்கும் கொடுவாளை - கொட்டும் தேளை, நட்டுவாய்க் காலியை - தீண்டும் பாம்பை மனப் பொருளாகக் கொண்டவன் மேல், மற்றையார் எண்ணம் எப்படி இருக்கும்? வேம்பினும் எட்டியினும் கசப்பாக இருக்கும் அல்லவோ!

வள்ளுவர் தம் வாய் மொழியில்,

"இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்"

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது?"

என்பவற்றைப் பொருளுணர்ந்து ஓதினால் இன்னாச் சொல் கூறுவனோ?

கூறிய வெல்லாம் என்ன?

மன மாசின்மை - மனமாசு ஆக்குவன - மனமாசு அகற்றுவழி என்பவைதாமே!

குடும்ப வாழ்வு அன்பு என்னும் பண்பின் விளக்கம்! அக்
குடும்ப வாழ்வு அறம் என்னும் விளைவு தருவது!

அக்குடும்ப வாழ்வு அறம் எத்தகைய எளியது; அதனைப்போற்ற அரிதில்லையே!

"முகத்தான் அமர்ந் தினிதின் நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.

முகத்திற்கு முகம் அமரப்பார்த்தல் அறம்! இனிதாகப் பார்த்தல் அறம்! மனத்தொடு கூடி மகிழ்வுக்கு ஆட்படுத்தும் நல்ல இனிய சொல் சொல்லல் அறம்! இவற்றைக் கொண்டாலே அறமாகி விடுமே! அள்ளியா தரவேண்டும்?

கோடியா கொட்ட வேண்டும்?

ஒருவரை ஒருவர், வாட்டாமல் வருத்தாமல் நோகடிக்காமல் நோயராக்காமல் வாழ்ந்தால் போதுமே,

கோயில் கட்டி, கொடிமரம் நட்டி, கோட்டை கோபுரம் எழுப்பியா அறப்பேறு பெற வேண்டும்? இவ்வெளிய அறம் போற்றலாமே! மனிதரை எண்ணுவதே அறம் தானே!

"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை"

என்பதைத் தெளிந்தால் உண்மை முந்து நிற்கும் அல்லவோ!

மனமாசுகள் இவை என நான்கனை எண்ணியுரைத்த வள்ளுவர், இவற்றை விளக்கும் வகையில்,

1. அழுக்காறாமை
2. அவாவறுத்தல்
3. வெகுளாமை
4. இனியவை கூறல்
5. இன்னா செய்யாமை

என்னும் அதிகாரங்களைப் படைக்கிறார். சுருங்கச் சொல்லல் விளங்க

வைத்தல் இரண்டு உத்திகளால் விளக்கிய அருமை அது. அவற்றை விரித்துக் கூறின் பொழிவு பெரிதாம்.

அழுக்காறு, ஒழுக்கம் ஆகாது; அழுக்காறு என்பது பாவி; ஆக்கமெல்லாம் அழிப்பது, அழுக்காறு உடையவனைத் தானே கேடாக இருந்து அழிப்பது என்கிறார்.

அவாவே துன்பமூலம்; அவா இன்மை தூய்மைச் சான்று; அவாவில்லாமையே இன்பத்திற்கெல்லாம் அடிப்படை; அவாவற்றுப் போதலே பிறவிப்பேறு என்கிறார்.

வெகுளாமையே தலையாய அடக்கம்; நாவைக் காப்பதே பெருங்காவல்; சினத்தைப் பொருளென்று கொண்டவர் இனத்தோடும் அழிவர்; சினத்தின் எல்லை கடந்தவர் செத்தவரே ஆவர் என்கிறார்.

இனியவை கூறலால் உறவு உண்டாம்; வறுமை இல்லாம்; சிறுமை அகலும்; பெருமை சேரும்; அறம் பெருகும்; அல்லவை தேயும் என்கிறார்.

இன்னா செய்யாமையால் தன்னுயிர் தளிர்ப்பான்; மன்னுயிர் காப்பான்; தீமை செய்தார்க்கும் நன்மை செய்பவனும், கொடியவனுக்கும் நன்மை செய்பவனும் மாசிலாப்பிறவி மாண்பன் என்பார்.

இனிய அறத்தின் இடத்தில் எதற்கு முதலிடம், எதற்கு இரண்டாம் இடம் என எண்ணுகிறார் வள்ளுவர். தாம் எண்ணி வரிசைப்படுத்திய முதலிரண்டு இடங்களையும் தம் மேதகை அறிவால் மாற்றி அமைக்கவும் செய்கிறார்.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்; பிற
செய்யாமை செய்யாமை நன்று."

என்றும்,

"பொய்யாமை அன்ன புகழில்லை"

என்றும் கூறிய அவரே,

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று."

என்று இரண்டாம் இடத்திற்குத் தள்ளுகிறார்.

இதனால் வள்ளுவர் குழம்புகிறார் என்றோ, குழப்புகிறார் என்றோ கருதுதல் கூடா. குழப்பத்தை நீக்குகிறார். உலகம் வாய்மையையே தலையாய அறம் என்கிறது! உண்மைதான்! ஆனால் பொய்யனும் தன் தவற்றை உணர்ந்து உயரிய மெய்யனாக வாழ முடியும். ஆனால் கொன்றவன் பின்னே அருளாளனாக மாறினாலும், கொல்லப்பட்டதை அவன் கொண்ட அருள் எழுப்பி விட முடியுமா? கொலை கொலை தானே! ஆதலால், பொய்யாமையை முதலாகக் கொள்ளும் உலகம், கொல்லாமையையே முதலறமாகக் கொள்ளல் வேண்டும் என்கிறார். அறவினை யாதெனில் கொல்லாமை என்றும், கொல்லாமை சூழ்வான் தலை என்றும், பிறிதின் உயிர் நீக்குதலைத் தன்னுயிர் நீப்பினும் செய்யற்க என்றும், கொன்றாகும் ஆக்கம் கடை என்றும் அடுக்கடுக்காகக் கூறிக் கொல்லாமை அறத்தை நிலைப்படுத்துகிறார்.

ஆளுவோன் அரசன்; அரசன் என்பதன் பொருள் செம்மையன்; செங்கோலன் என்பதே. அவன் ஆட்சி அறமுறைப்பட்டது எனின், அவனை அவ்வறமே காக்கும்; அறமுறை தவறின் அவனை அதுவே அழிக்கும். ஆதலால் அரசன் – ஆள்பவன். அறவனாதலே தலைக்கடனாம் என்கிறார்.

இல்வாழ்வானும் தான் அறவன் என்பதனுடன்,

பிறன் மனை நோக்காத பேராண்மையனாக இருந்தால் மேலும் மேம்பட்ட அறவன் ஆவன் என்கிறார். அறன் கடை நின்றார் எவர் எனின் பிறன் கடை நின்றார் என்றும் கூறுகிறார்.

பெரியவர் எவர் என்பதை, 'அறனறிந்து மூத்த அறிவுடையார்' அவர் உறவைத் திறனறிந்து தேர்ந்து கொள்ளல் வேண்டும் என்று பெரியாரைத் துணைக் கோடலில் கூறுகிறார்.

அறவர் உறவே அறவராய் நிலைக்க உறுதுணை என்கிறார்.
அறத்தோடு பொருந்தாச் செயல்வகையில் ஒருவன்
வறுமையுற்றால், அவ்வறுமையுற்றவனைத் தாய்தானும்
ஒப்பமாட்டாள்; ஒதுக்கித் தள்ளுவாள் என்பதை,

"அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்."

என்கிறார். இவற்றாலும் இன்ன பிறவற்றாலும் எப்பாலும் அறமே திகழ வேண்டும் என்பது முப்பாலார் முடிவு என்பது புலப்படும்.

இயற்கை தானும் அறக்காவலதாய் உள்ளமையை,

"அறம் நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறம் நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை."

என்பதாலும்,

"என்பி லதனை வெயில் போலக் காயுமே
அன்பி லதனை அறம்"

என்பதாலும் கூறும் வள்ளுவர் உள்ளம், உலக இயற்கையாம் இயங்கியலும் அறவழிப்பட்டது என்பதை உணர்த்தும் என்க.

# 2. திருக்குறளில் அறிவு

அறிவின் இலக்கணம் என்ன ? அறிவியல் ஊழியாக விளங்கும் இக்கால அறிவு விளக்கத்திற்கும் தொல் பழங்கால அறிவு விளக்கத்திற்கும், அறிவின் இலக்கணம் ஒத்து வருமா ?

தமிழ் கூறும் உலகம் விரிந்து, மண்ணகப்பரப்பெல்லாம் காணும் வகையில் கடல்உலாக் கொண்ட விரிவும் விரிந்து, அண்டம் விட்டு அண்டம் செல்லும் நிலையில் வளர்ந்த அறிவுக்கும், பண்டை அறிவுக்கும் அமைந்த இலக்கணம் ஒன்றாக இருக்குமா ?

இருக்கும்; இருந்தே தீரும்; என்பதைக் காட்டுகிறது வள்ளுவம்.

அறிவு என்பது, "அறிதோறும் அறியாமை காணல்" என்பதாகும் (1110). ஒன்றை அறியும் போது, அதற்கு முன் அதை அறிந்திலோமே என்ற எண்ணம் ஏற்படுமானால் அதற்குப் பெயர் அறிவு என்பதாம்.

இற்றை அறிவியல் இலக்கணம் இதுதானே!

கல்லையும் கல்லையும் தட்டித் தீ உண்டாக்கிய நிலை இன்று இல்லை! விளக்கு திரி எண்ணெய் தீ எனத் தேடும் நிலை இன்று இல்லை! கிழியஞ்சட்டி - குத்து விளக்கு - சுவரொட்டி, தூக்கு விளக்கு, ஆவி விளக்கு என்பவை காட்சிப் பொருளாயின. என்ன மாற்றம் வந்தாலும் அறிதோறும் அறியாமை என்னும் அறிவின் இலக்கணம் மாறிற்றில்லை. என்னை அறிந்திலேன் இத்தனை காலமும் என்று அறியும் போதுதானே அறிவு விளக்கம் ஆகின்றது; எல்லாம் அறிந்தேன்; அறிய வேண்டுவதில்லை எனின், அறிவுக்கு மூடுவிழா ஆகிவிட்டது அல்லவா!

“எனக்கு ஒன்றே ஒன்றுதான் தெரியும்; அந்த ஒன்றும், ஒன்றும் எனக்குத் தெரியாது என்பது தான்” என்ற சாக்கிரடீசர் அறிதோறும் அறியாமை கண்டவர் அல்லரோ!

பத்தாண்டுகளுக்கு மேலாகச் சிறைவாழ்வு கொண்ட நேரு, சிறைச் சாலையில் இருந்த போது படித்த நூல்களைப் பற்றி என்ன அளவீடு செய்கிறார்? “நான் எவ்வளவு அறியாமையுடையவனாக இருந்தேன் என்பதை அறிந்து கொள்ள வாய்த்தது சிறைச்சாலை வாழ்வு” என்றதன் பொருள் என்ன? அறிதோ றறியாமை கண்டமை தானே!

அறிவின் முக்கூறுகள் பற்றி வள்ளுவர் ‘நுண்மாண் நுழை புலம்’ என்கிறார் (407). அவை, நுண்மை, மாண்மை, நுழைமை! அறிவு நுட்பமானது! அறிவு விரிவானது! அறிவு ஆழமானது! குண்டூசியும் ஆய்வுப் பொருளே! குன்றமும் ஆய்வுப் பொருளே! பூவும் ஆய்வுப் பொருளே! பூதமும் ஆய்வுப் பொருளே! ஆழ்கடலும் ஆய்வுப் பொருளே! விரிவானும் ஆய்வுப் பொருளே! எவை எனினும் ஆய்வு அடிமணை, அறிதோறும் அறியாமை என்பதே!

அறிவின் எல்லை காண இயலுமா? எல்லையிலா ஒன்றற்கு எல்லை காண்பது எப்படி? வரம்பில் அறிவு என்பது இறைமைப் பண்பாகக் கூறப்படுவது. ஆதலால், ‘அறிவே கடவுள்’ என்றனர். அதன் இலக்கணத்தை இறையிலக்கணமாக்கி ‘ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே’ என்றார் மாணிக்க வாசகர்.

நுணுக்கத்தில் நுணுக்கமாவது அறிவு; அவ்வாறே, அகற்சியில் அகற்சி யாவதும் அறிவு! என்பதை, ‘அஃகி அகன்ற அறிவு’ என்பார் வள்ளுவர். ‘புகை நுழையா இடத்தும் புலமை நுழையும்’ என்பதால் அதன் நுண்மை புலப்படும்!

“உண்டைப் பிறக்கம் அண்டம்; நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன” என்னும் போது, அறிவின் அகற்சி புலப்படும்.

இயற்கையான் மாந்தர்க்கு ஆறறிவு வாய்க்கின்றது.

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று – அறிதல்.

பொறிகள் வழியாகப் புலன்களைப் பெறுகிறோம்.

மெய்வாய் கண்மூக்கு செவி என்னும் பொறிகள் வழியே

பெறும் அறிவை அன்றி, மனத்தால் பெறும் அறிவே மாணறிவு.

அவ்வறிவு மற்றை உயிரிகளுக்கு இல்லாமையால் அறிவுகளில்

சிறந்த மனஅறிவுடையர் வாழும் உயிர்; மன்னுயிர் எனப்பட்டனர். மக்கட் பேற்றில் திருவள்ளுவர் அறிவறிந்த மக்கட் பேறே பேறு என்கிறார். பெறும் பேறுகளில் எல்லாம் பெரும் பேறு மக்கட் பேறே என்பவர், பெற்றோர் தம் அறிவினும் தம் மக்கள் அறிவு மேம்படச் செய்வது கடமை என்று வலியுறுத்துகிறார். ஏனெனில் குடும்பச் சிற்றளவை உலகப் பேரளவாக விரித்து நிறுத்துபவர் அம் மக்கள் என்பதாலேயே யாம்.

"தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்பது அது (66).

அறிவு என்பது பகுத்தும் பிரித்தும் பிளந்தும் கூறு கொண்டும் காண்பது என்பதாலேயே 'அறு' என்னும் முதனிலை பெற்றது. பகுக்காமல் பிரிக்காமல் பிளக்காமல் கூறுபடுத்தாமல் நுணுகியும் விரிந்தும் நோக்காமல் ஐயம் திரிபு அற ஒன்றை உறுதிப்படுத்த இயலாது. ஆதலால் அறிவு என்பதே பகுத்தறிவு தான். ஆனால், அறிவின் பேரால் அறிவுக்கு ஒவ்வாப் புனைவு, போலிமை, கண்மூடித்தனம் என்பவை அறிவுடையவர்களால் இட்டுக் கட்டிப் பரப்பப் பட்டமையால், அவற்றை மறுப்பதற்காக அமைந்த அறிவு, பகுத்தறிவு எனப்பட்டது.

**தமிழ்நெறிப்படி அறிவு என்பதே பகுத்தறிவு தான்!**

தமிழாகக் கூறப்பட்ட நம் மொழி பன்மொழிக் கலப்புக்கு

ஆட்பட்டமையாலும் சிதைவு கொச்சைகளுக்கு இடமாயதாலும்

தனித்தமிழ் என்றும், செந்தமிழ் என்றும் வழங்கப்பட்டதைக் கொண்டு அறியலாம்! தமிழ் என்பதே தனித்தமிழ் தான்! செந்தமிழ்தான்! பால் என்பதே நல்லபால் தான்! கலப்படப்பால் வந்ததால் நல்ல பால் என வழக்காகியமை போன்ற தென்க.

அறிவின் விளக்கத்தை 'அறிவுடைமை' என்றோர் அதிகாரமாகவே வகுத்த திருவள்ளுவர் மற்றை அதிகாரங்கள் சிலவற்றிலும் ஊடுபயிர் போல விதைத்துள்ளார்! உவமைப்படுத்தியுமுள்ளார்!

மனம் போன போக்கிலெல்லாம் போக விடாமல் தடுத்து நிறுத்தவல்ல ஆணை ஆசான் அறிவேயாம் என்கிறார்.

"சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு"

என்னும் குறளின் நயத்தை எண்ணிப்பார்க்க (422)

தொண்டைமான் இளந்திரையன் என்பான் ஆட்சியாம் வண்டி இயக்குதலைப் பற்றி எழுதிய பாடல் ஒன்று புறநானூற்றில் உள்ளது. அது,

"கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்
ஊறின் றாகி யாறினது படுமே
உய்த்தல் தேற்றா னாயின் வைகலும்
பகைக்கூழ் அள்ளல் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே"

என்பது (185). உருளையும் பாரும் இணைத்து இயக்கும் காவல் சகடத்தை (வண்டியை) இயக்கும் ஒருவன், இயக்கும் தேர்ச்சியனாக இருந்தால் அச்சகடம் இடர்ப்படாமல் செல்லும். ஆனால், அதனைச் செலுத்துவோன் தக்கோன் அல்லனாக இருந்தால் நாள்தோறும் பகையாம் சேற்றுள் சிக்கிப் பலப்பல துயர்க்கும் அச்சகடம் ஆட்படும் என்பது அது.

கால்பார் கோத்த வண்டி என்ன ? கட்டை வண்டி, வில் வண்டி, தேர், மிதி வண்டி, மிதியுந்து, மகிழ்வுந்து, சரக்குந்து, தொடரி, கப்பல், வானூர்தி – எதுவாக இருந்தால் என்ன? இயக்குவோன் திறவோனாக இருக்க வேண்டும் அல்லவோ! இல்லாக்கால் ஏற்படும் துயர்க்கு எல்லைதான் என்ன? ஊர்தியை அல்வழி நீக்கி நல்வழியில் செலுத்துவதே அறிவாம்! திருட்டும் கொள்ளையும் வஞ்சமும் சூதும் கொலையும் பிறவும் செய்வார்க்கும் தேர்ந்த அறிவு உண்டு காண்! அஃது அறிவா எனின், அழிவாக்கும் அதனை அறிவு என்பது அடாத் தன்மையது!

இதனைத் திருவள்ளுவர் பிறிதோரிடத்தே, பிற உயிர்களின் துயரத்தைத் தன் துயர்போல் கருதாதவன் கொண்டிருக்கும் அறிவு அறிவாகாது! அவ்வறிவு பாழாம் அறிவு என்பார். அது,

"அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய் போல் போற்றாக் கடை"

என்பது (315)

அறிவு அழிவு செய்யாது! அழிவுவாராமல் காப்பதே அறிவு என்பதை,

"அறிவு அற்றம் காக்கும் கருவி"

என்றார். அற்றமாவது தீராச் சிக்கல் உள்ள பொழுது! தீராச்சிக்கலையும் தீர்க்கும் கருவி அறிவாகும். அன்றியும், மாறானவர்களும் தீமை செய்தற்கு இயலா வகையில் காக்கும் காப்பரணம் போன்றதும் அறிவு என்கிறார்.

"அறிவற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்" (421)

என்பது அது.

வரவிருப்பது ஆக்கமா கேடா, நலமா பொலமா என்பவற்றை அறிவுடையவர் தம் கூர்த்த அறிவால் அறிவர். மற்றவர்கள் பட்ட

பின்னரே அறிவார்; அப்பட்டறிவைப் பயனாக்கி யாவது தெளிவடைவாரா? மீள மீளப் பட்டழிவார்!

"அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்." (427).

வருவதை யுணர்ந்து வாழ்வார்க்கு, அதிரவரும் துயர் இல்லை. அதனால் மாரடைப்புப் போலும் துயர்தானும் அவர்க்கில்லை.

ஏனெனில்,

"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்."

என்றார் திருவள்ளுவர் (429)

இதனை உடையவர், அதனை உடையவர் என்று எண்ணிக் கணக்கிடல் வேண்டா. அறிவை மட்டும் தேடிக் கொண்டு விட்டால் போதும். அவர் அனைத்து உடைமைக்கும் உரியவர். அறிவிலார் மற்றைப் பல உடைமைகளை உடையவர் ஆயினும் அவர் எதுவும் உடையவர் ஆகார்!

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்" (430)

இனி, அறிவு அறிவு என்பது தான் என்ன?

எவர் எவ்வளவு பெரியவர் எனினும், தெளிவுடையவர் எனினும் நெருங்கிய நேயர் எனினும் அவர் சொல்பவற்றை அப்படியே சரியானதென்று நம்பி விடாதே! உன் அறிவுக்குத் தக எண்ணிப்பார்; நான் சொல்வதே எனினும் அதனையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் உன் அறிவொடு உராய்ந்து பார்த்துத் தக்கது என்றால் ஏற்றுக் கொள் இல்லையானால் தள்ளிவிடு என்கிறார் திருவள்ளுவர்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு!" (423)

வள்ளுவர் இப்படிச் சொல்கிறார் ஏன் ? தம் நூலைக் கற்பவர் கற்று அறிந்து தெளிவுடையவராய் இடரிலா வாழ்வினராய் இலங்க வேண்டும் என்னும் விரிந்த மனத்தால்தான், இப்படிக் கூறினார். தமக்கெனக் கூட்டம் சேர்க்கவோ அதனால் பயன்பெறவோ எண்ணியிருந்தால், என் சொல்லே சொல்! அதற்கு மேல் எண்ணாதே! "என் சொல்லைக் கேட்டு நம்பினால் எல்லாப் பேறும் உன்னைத் தேடி வரும் என்று கூறியிருப்பார்! எந்தச் சமயத் தரும் - சமயக்குருவரும் - ஆய்ந்து பார்த்து அறிவுக்குத் தகுமானால் ஒப்புக் கொள் என்றாரா? புத்தர் சொன்னார்;" நான் சொல்கிறேன் என்பதற்காக நம்பாதே. உன் அறிவுக்கு ஏற்குமானால் நம்பு என்றார். அவர், நெறி அல்லது அறம் என்றே தொடங்கினார்! பின் வந்தவர்களோ புத்த சாதகக் கதை முதலாகக் கட்டுக் கதைக் கண்மூடித் தனத்தை வளர்த்து முற்றாகக் கட்டுக் குலைப்புச் செய்து விட்டனர்.

சாக்கிரடீசர் சிந்திக்க ஏவினார்; பெரியார் சிந்திக்க ஏவினார். சமய வாணர் தம்மை நம்புவாறு ஏவினர்; ஆனால் சுட்டப்பட்டவர்களோ ஒவ்வொருவரும் தம்மை - தம்மறிவை. தம் ஆழிய சிந்தனையை நம்ப ஏவினர்.

திருவள்ளுவர் மேலும் கூறினார்:

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." (355).

ஒரு பொருள் தோற்றத்தால் கவர்வதாக இருக்கும். அதன் உள்ளீடு நேர்மாறாக இருக்கும். ஆதலால், வெளிப்படு நிறம் வடிவம் சொல் சுவை கொண்டு மட்டும் அதனை ஏற்றதெனக் கொள்ளல் ஆகாது. பெருங்கேடு உள்ளிருக்கவும் செய்யும். அதனால், அதனை நன்கு ஆய்ந்தே நலம் பயப்பதாயின் எடுத்துக் கொள்க என்கிறார்.

'இனிமை, இனிமை எனச் சுவைதான்! பின்னே வரும்
இனிப்பு நோய் எதனால்? அதனால்!

பனிநீர், பனிப்பழம், குளிர்குடி என்பன வெல்லாம் சுவைதான்.

ஆனால், பின்னே வரும் ஈளை, மூச்சிரைப்பு, திணறல் எவற்றால்? அவற்றால்!

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்" - என்னும் வள்ளலாரியமும்,

"எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு" - என்றும் (820).

"கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு" என்றும் வரும் வள்ளுவங்களும் எண்ணத் தக்கனவாம் (819).

விரும்புவது வந்தால் ஓஓ என மகிழ்தலும், வெறுப்பது வந்தால் ஆஆ என அலறுதலும் ஆகா! அது தொட்டாற் சுருங்கி வாழ்வு! உயர்ந்தோர் பகலையும் இரவையும் மாறிமாறி வரும் இயற்கைய என்பது போல விருப்பு வெறுப்பு மாறி வருவதே உலகியல் எனக் கொள்வர். அவ்வாறு வாழ்வதே அறிவாகும் என்பதை,

"உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு" (425)

என்றும்,

"எவ்வ துறைவ துலகம் உலகத்தோடு
அவ்வ துறைவ தறிவு" (426)

என்றும் கூறினார்.

அறிவாளன் என்பதற்கோர் அடையாளம் காட்டுகிறார் வள்ளுவர்.

நான் சொல்வதை எவரும் புரியார்; பிறர் சொல்வதை நானும் புரியேன்; புரியாமல் சொல்லிப்புரியாமல் ஆக்குவதே யாம் புரிந்து கொண்ட அறிவு என இருப்பார் உலகில் இல்லாமல் இல்லையே! வள்ளுவர் கூறுகிறார். எளிதாக எவரும் புரியுமாறு சொல்லுதல், புரியா வகையில் பிறர் நுட்பமாகச் சொன்னாலும் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் ஆகியவை அறிவுடைமைக் கடையாளம் என்கிறார்.

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தாம்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு."

என்பது அது (424)

அறிவிலே காரறிவு, புல்லறிவு எனப் பல வகையுண்டு.

களவுக்குப் பயன்படும் அறிவு, நல்லறிவு தானா? இருளை - மறைவை - பிறர் அறியா திருக்கும் நிலையை - சோர்வைப் பயன்படுத்திக் கொண்டு, களவே, திருட்டே, கவர்வே, கொள்ளையே என வாழ்வார் என்ன அறிவைப் பெற்றிருந்தாலும் அவ்வறிவு காரறிவேயாம். அவ்வறிவு ஒளியுடையர் அறிவு ஆகாது!

"களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்" (287).

ஏனெனில், அறிவுடையார் அறனறிந்தோர். ஆதலால், பிறர் பொருளை விரும்பார். உலகியலில் நிலைபேறானது இது; நிலையற்றது இது என இரு கூறுகள் உண்டு. நிலைபேறானதை நிலையற்றதாகவும், நிலை பெற்றதை நிலையற்றதாகவும் எண்ணல் நல்லறிவாகாது. அது புல்லறிவாம்!

"நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை." (331)

இன்னொரு புல்லறிவையும் சுட்டுகிறார் வள்ளுவர்.

தாம் செய்யும் குற்றம் குறைகளைத் தாமே உணர்ந்து திருத்திக் கொள்ளல் அறிவாகும். அவ்வாறு திருத்திக் கொள்ளாமல் தம் குற்றம் குறைகளைத் தம் அறிவால் மறைத்துக் கொள்வார் அறிவு, அறிவன்று. அது புல்லறிவாம்! ஆடையால் மான உறுப்பை அவர் மறைத்து வாழ்வதால் அவர் அறிவுடையவர் ஆகார்.

"அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி" (846)

அறிவுடைமையை விரித்துரைத்த வள்ளுவர் புல்லறிவாண்மை என்றோர் அதிகாரமே வகுத்துத் தெளிவு செய்தார்.

பொருளின்மை இன்மையன்று; அறிவின்மையே இன்மை என்பதை,

"அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு" (841)

என்கிறார்.

அறிவிலான் தன்னைத் தானே கெடுத்துக் கொள்வான். அவனைக் கெடுக்கயாரும் வேண்டுவது இல்லை. தனக்குத் தானே துன்பம் செய்து கொள்வதில் தலைப்பட்டவன் அறிவிலியே ஆவன் (843, 847)

அறிவிலிக்கு அறிவுறுத்த நினைக்கும் அறிவுடையவனும் அறிவிலியால் அறிவிலான் ஆக்கப்பட்டு விடுவான் (843).

பண்புடையாளர்களால் தான் உலகியல் செப்பமாக நடைபெறுகிறது என்றால், அதனை ஒப்பமாட்டான் அறிவிலி(850)

அறிவிலி தன் செல்வத்தைப் போலியர்க்கும் பொய்யர்க்கும் புனைகோலத்தவர்க்கும் வழங்குவானே அல்லாமல் நல்லோர்க்கு வழங்கான் (842).

- இவ்வாறு அறிவிலான் இயல்பை விரித்துரைக்கிறார் வள்ளுவர்.

அறிவுடையவனைத்தாக்கும் வகையில் எத்தனை துயரங்கள் வந்தாலும் அவன் தன் அறிவால் அவற்றை அகற்றி வெற்றி வீரனாக விளங்குவான் என்பதை,

"வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்" (622)

என்பார்.

இனி, அறிவு பெறும் வகைமைகளையும் வள்ளுவர் தெளிவுறக் கூறுகிறார். மாந்தப் பிறவி **கல்வி கேள்வி தற்சிந்தனை** பட்டறிவு என்பவற்றால் அறிவைப் பெறு முன்னரே பிறக்கும் போதே பெற்ற அறிவு ஒன்று உண்டு. அது மரபு வழி அறிவு! கருவிலேயே அமைந்த அவ்வறிவு, தன் பிறப்பொடும் உள்ள அறிவு. ஆதலால், அவ்வறிவு **உண்மை அறிவு** எனப்படும்.

எத்தனை எத்தனை அறிவைப் பெற்றாலும் அவ்வுண்மை அறிவு மற்றை அறிவுகளினும் மேலோங்கி நிற்றல் உண்டு என்பதை,

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்."

என்கிறார்.

இவ்வுண்மை அறிவே முதலாவதாக அமைந்த அறிவாம்.

அடுத்துவரும் அறிவு கல்வியாலும், கேள்வியாலும் பெறும் அறிவு. கல்வியால் பெறும் அறிவு வெள்ளப்பெருக்கு என்றால், கேள்வியால் பெறும் அறிவு ஊற்றுச் சுரப்பு அன்னதாம்! கற்க வாயா இழப்பைக் கேள்வியால் ஓரளவு நிறைவு செய்யலாம் என்பதால் கல்வி, கேள்வி அதிகாரங்களை வகுத்தார். எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் என்றார்.

மேலும், தன் சூழலால் பெறும் அறிவு தற்சிந்தனை அறிவு, பட்டறிவு என்பனவும் ஒருவர்க்கு வாய்க்கும். சூழல் அறிவை,

"மனத்துளது போலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகும் அறிவு"

என்பார் (454) மேலும் அதனை அருமையான உவமையால் விளக்குகிறார்.

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு"

என்பது அது (452)

"மனத்து மாசு அகலும் வகையில் கற்றலும் கற்றபடி நிற்றலும் வேண்டும்.

எண்ணும் எழுத்துமே கண்கள்

கற்றவரே கண்ணுடையவர்

செல்வர் செல்வம் பெற வறியவர் எதிர்பார்த்து நின்று பெறுவது போல் கல்வி வல்லோரிடம் கற்றல் வேண்டும்.

ஊற்றைத் தோண்டிய அளவு நீர் ஊறுவது போல் ஆழ்ந்து கற்கக் கற்க அறிவு ஊறும். எவ்வூரும் தம் ஊராகக் கற்றவர்க்கு ஆவதால் வாழுநாளெல்லாம் கற்றல் வேண்டும். ஒருமுகப்பட்டுக் கற்றால் அக்கல்வி என்றும் பாதுகாப்பாக அமையும்.

தாம் பெற்ற கல்வி இன்பத்தைப் பிறரும் பெற வேண்டும் என்னும் எண்ணத்தால் கற்பவரும் கற்பிப்பவருமே கற்றோர்.

அழியாததும் கேடுதராததுமாம் கல்வியை ஒத்த செல்வம் வேறு இல்லை. இவை **கல்வி அதிகாரச் சுருக்கம்**

கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் கேள்வி பயன் செய்வதைக் கூறுகிறார்.

செவிச் செல்வம் செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வம். வயிற்றுச் சுவையுணவினும் செவிச் சுவையுணவாம் கேள்வியே சிறந்தது. நாவுணவு வாய்க்குமிடம் தேடிச் செல்வது போல், செவியுணவு வாய்க்குமிடம் தேடிச் செல்லுதல் வேண்டும்.

கல்வியைப் பெறாதவரும் கேள்விச் செல்வம் பெற்றால் வறந்த காலத்து ஊற்று நீர் போல் பயன்படும்.

வழுக்கல் நிலத்தில் நடப்பவர்க்கு ஊன்று கோல் உதவுவது போல் கேள்வி உதவும்.

நல்லவற்றைக் கேட்ட அளவு நலமாம்.

நல்ல கேள்வியறிவாளர் அறியாமை அகல்வர்.

கேளாச் செவியினும் குறையுடையது கேட்கும் செவியிருந்தும் கேளாச் செவியை உடையராதல்.

கேள்வி அறிவிலார் பணிவுடையராக விளங்குதல் அரிது.

செவிச் சுவை உணராமல் வாய்ச் சுவையே வாழ்வாவார், வாழ்ந்தாலும் அழிந்தாலும் என்ன பயன்?

**இவை கேள்வி அதிகாரச் சுருக்கம்.**

கல்லாமை அதிகாரத்திலே, கற்றவர் மக்கள்; கல்லார் விலங்கு என்கிறார்.

> "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்."

என்பது அது. மக்க்ள் அடையாளமாம் அறிவைப் பெறாமல் விலங்காகக் கீழ்மையடையாதே என்று அவ்வதிகார நிறைவில் கூறுகிறார்.

# 3. திருக்குறளில் அறிவியல்

தமிழைக் 'கலைமலி தமிழ்' என்பர். 'ஆய கலைகள் அறுபத்து நான்கு' என்றும் எண்ணினர். எண்ணுவார் எண்ணத்தின் அளவே இது. எண்ணி முடிக்க முடியாததாய் என்றும் வளர்வதாய் உள்ளதை எண்ணிமுடியமா? எண்ணின், இறந்தாரை எண்ணிக் கொண்டற்று என்பதாகவே முடியம்.

தமிழியல் ஆயாதவர் எழுப்பும் வினா, தமிழில் அறிவியல் உண்டா? அறிவியல் கற்பிக்கத் தமிழாகுமா? என்பவை. அவர்கள் செய்துகெண்ட முடிபு 'இல்லை'; 'ஆகாது' என்பவையே! ஏனெனில் அவர்களிடம் தமிழ்ப்பற்றோ தமிழறிவோ இல்லை என்பதைத் தாமே வினாவித்தாமே விடை கூறிக் கொண்டதாம்!

'உன்னால் முடிந்தால் தமிழால் முடியும்! தமிழைப் போல் உயர்ந்த மொழியும் இல்லை; அதே பொழுதில், தமிழரைப் போல் தாழ்ந்தவரும் இல்லை என்பதை மெய்ப்பிக்காமல் ஒதுங்கி நிற்கும் ஒன்றே உருப்படியான செயலாம். உனக்கும் அது புகழாம்; மொழிக்கும் ஆக்கமாம் என்பதே நன்முடிபாம். இனித் திருக்குறளில் அறிவியல் என்றால் என்ன ஐயா, திருக்குறள் அறநூல் என்றீர்கள்! அறநூலில் அறிவியல் உள்ளது என்று கூறத் தொடங்கிவிட்டீர்கள்! திருவள்ளுவர். ஆய்வுக்கூடம் வைத்துக் கருவிகளைக் கொண்டு ஆய்ந்தவரா? என வினா எழுப்புவர்.

திருவள்ளுவர் 'அகர முதல' என்றார். இத் தொடக்கமே அறிவியல் தொடக்கமாம். ஒட்டி இருக்கும் இதழ்களை அகலத் திறந்து ஓசை எழுப்பினால் அதன் ஒலி அகரமாம்! அகலத்தின் வழியே பிறப்பது அகரம் என்பது பொருள் பொதிந்த அறிவியல் பெயரீடு அல்லவா!

முதல் என்பது என்ன? முதல் மூவர் என்றால் முதல் என்பது ஒன்று என்னும் எண் தானே! முதன்மை, முதல்வர் என்பவை முதன்மையோடு சிறப்பும் இல்லையா? கிழங்கு, தண்டு, வேர், வித்து, விந்து என்பவை முதல் இல்லையா? முதல் என்பது தானே மூலம்!

எந்த ஒன்றும் முதல் இல்லாமல் முளைத்தல் வளர்தல் கிளைத்தல் பூத்தல் காய்த்தல் இல்லையே!

'வள்ளி முதல் அரிந்தற்று', 'வளி முதலா எண்ணிய மூன்று' 'முதல் இலார்க்கு ஊதியமில்லை'; 'முதற்றே உலகு' என்பவற்றை எண்ணினால் முதலின் விரிவு புலப்படுமே. வித்து முதல், வேர் முதல், தண்டு முதல், கிழங்கு முதல், விந்து முதல் என்பவை இல்லாமல் எந்த உயிராவது தோற்ற முறுமா? ஒரு தோற்றமும் வளர்ச்சியும் விரிவாக்கமும் அமைந்தவை தாமே வழி வழி மரபு! நாம் காணும் புல்லோ பூண்டோ மரமோ செடியோ கொடியோ புழுவோ பூச்சியோ பாம்போ பல்லியோ மானோ புலியோ மாந்தரோ ஒருமுதலில் இருந்து பிறந்து பரவி விரிந்த விரிவாக்கம் தாமே! இவை அறிவியல் இல்லையா?

'அகர முதல' என்பதனொடு இகர ஈறு ஒட்டினால் என்ன ஆகும். அகர முதலி ஆகும். அகரத்தொடு ஆதி சேர்த்தால் அகராதி ஆகும். அகராதி நிகண்டு என்று ஒரு நிகண்டு நூல் உண்டாயிற்றே! அகர முதல என்பதன் வழியாகப் பிறந்த அறநூல்கள் ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் என்பவையாம். ஔவையார் ஆத்திசூடியின் பின்னர் ஆத்தி சூடிகள் எத்தனை? அகர முதல என்பது ஒரு பாரிய வரலாற்றையுடைய தாயிற்று இல்லையா?

பகவன் என்பதொரு சொல் முதற்குறளில் இடம் பெற்றுளதே! அது, அறிவியல் ஆக்கமா? கடவுளாக்கம் கண்மூடித்தனம் என்னும் பகுத்தறிவு உலகில் பகவன் அறிவியல் சொல் என்பது ஏற்கப்படுமா?

'அறிவியல் ஆக்கம் ஆகாது' என்பது பகுத்தறிவு நோக்கு. அந்நோக்கு ஏன் வந்தது? கடவுள் ஓர் உருவமும், ஒரு பேரும்,

உடையதன்று. அதற்கு மாந்தரினும் இழிமைப்பட்ட செயற்பாட்டுக் கதைகளும் தோற்றம் பற்றிய அருவறுக்கும் புனைவுகளும் வள்ளுவர் வழியில் அறவே இடமில்லையாம்.

பகல், பகவு, பகு, பகுப்பு, பாத்தி, பாத்தூண், பக்கு, பகை என்பனவெல்லாம் வள்ளுவம் வழங்கும் சொற்களாம். இவையெல்லாம் அறிவார்ந்த சொற்களாம். இப்படி அறிவார்ந்த சொல்லே பகவன் என்பதாம். பகவு + அன் = பகவன். அறிவு + அன் = அறிவன் எனப்பட்டது போன்ற சொல்லியல் முறை அதுவாம்!

"இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்."

என்பது வள்ளுவம். பக்கு என்பது பிளவு. இன்னும் மக்கள் வழக்கில் புண் காய்ந்து பக்குவிட்டு விட்டது எனப்படுகின்றது. புண் காய்ந்து மேல்தோல் பிரிந்து விடுதல் பக்கு என்பதாம். நாளைப் பகல் இரவு என்றும் நட்பு உடைவது பகை என்றும் வழங்கப்படுவது இல்லையா? பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறம் உயிரறம் என வள்ளுவம் வழங்கவில்லையா?

உலகத்தை வெளி, வளி, தீ, நீர், நிலம் எனப்பகுத்து, ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாகப் பகுத்து, அவ்வவற்றுக்குத் தகப்பிறப்பும் உணவும் வாழ்விடமும் பகுத்துப் படியளக்கும் இயற்கையைப் 'பகவு' என்பதை எண்ணினால், பகவின் உண்மை விளங்கும். மக்கள் வழக்கில் படியளப்பவன் என்பதை நினைக.

இனி, உலகு என்பதை எண்ணுவோம், உல், உலம், உலை, உலவுதல், உலா என்பவற்றை எண்ணினால் உலகம் என்னும் பெயரில் அறிவியல் விளக்கம் காணலாம்.

பழநாளில் மல்லர் பயிற்சிக்காக உருண்டைக்கற்கள் ஊர்மன்றங்களில் போட்டப்பட்டிருக்கும். பயில்வார் சிறிய

உருண்டையில் இருந்து சற்றே பெரிது பெரிதாகத் தூக்கித் தோளுக்கு மேல் உயர்த்திப் பின்னே போடுதல் வழக்கம். வாலியர்கள் பயிலும் பயிற்சிக் கல் ஆதலால் இளவட்டக் கல் என்றனர். உலம் எனப்பட்ட அவ்வுருண்டைக் கல்லைச் சீவகன் தூக்கி எறிந்து விளையாடியதை, உலம் கலந்த தோளினான் என்கிறது சிந்தாமணி! உருண்டைக்கல் மேல் வெந்த இரும்பை வைத்து அடித்த இடம் உலைக்களம் எனப்பட்டது. அக்கல் உலைக்கல் எனப்பட்டது. சமையல் செய்யும் அடுப்பாக மூன்று உருண்டைக் கல்லை வைத்தலை உலை கூட்டல் என்பர். பட்டுப்புழுவின் கூடு உருண்டை வடிவினது. ஆதலால் 'உலண்டு' எனப்பட்டது. உலகம் என்பது உருண்டையானது என்னும் அறிவியல் உண்மையை வெளிப்படுத்தும் சொல் என அறியலாம்.

உலாவச் செல்லுதல் உடல்நலம் என வலியுறுத்தும் காலம் இது. பழநாளில் அரசர்கள் வீதி உலாக் கொண்டனர்; தெய்வ உருக்களை வீதியுலாக் காட்சியாக்கல் கண்கூடு. உலா என்றோர் சிற்றிலக்கியமும் உண்டாயிற்று. உலாப்புறம் என்னும் கொடை நிலமும் உண்டு. இவற்றால் உலாவுவது உலகம் எனப்பொருள் தருதல் வெளிப்படை. கதிரும் மதியும், கோள்களும் மீன்களும் என்பவை எல்லாம் உலாவுதலையுடையவை என்னும் அறிவியல் உலகம் என்பதில் உண்டு அல்லவோ! "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்று வள்ளுவர் சுழற்சியைக் கூறவில்லையா?

உலாச் செல்வார் எப்படிச் செல்வார்?. வலமாகச் செல்வார். அதனால் திருக்கோயில் வலம், ஊர்வலம், நகர்வலம் என்பவை வழக்காயின! உலகம் உருண்டை; அது உலாவருவது; அவ்வுலாவலமாக அமைந்தது என்னும் மூன்று இலக்கணங்களும் உலகு உலகம் என்பவற்றில் உள்ளமை அறியலாம்.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு"

என்னும் திருமுருகாற்றுப்படையை ஒப்ப நோக்கி மகிழலாம். ஆக முதற்குறளிலேயே அகரம், முதல், பகவன், உலகு என்னும் நான்கு சொற்களிலும் அறிவியல் தேங்கிக் கிடப்பதை உணர்வார் மேலும் மேலும் கண்டு மகிழ்வர். திருக்குறளாம் அறநூல் அறிவியல் செறிவும் கொண்டது எனத் தெளியலாம்.

ஒரு புதிய சிந்தனை உண்டாகிறது. அச்சிந்தனை அதற்கு முன்னைச் சிந்தனையைக் காட்டிலும் உயர்ந்ததாக இருக்கிறது. அந்நிலையில் பழைய சிந்தனையை அதுவென்று விடுகின்றது.

ஒரு புதிய கண்டுபிடிப்பு உண்டாகின்றது. பழைய கண்டு பிடிப்பினும் பெருமையும் பரவுதலும் கொண்டு விடுகின்றது.

நாம் ஒரு காட்சியைக் காண்கிறோம். நம்மை வயப்படுத்துகிறது. இதனை நாம் அறியாமல் போய் விட்டோமே என நினைக்கிறோம்.

நம் பக்கத்திலேயுள்ள ஒருவர் பெரியவர்களால் பாராட்டப்படுகிறார்; பக்கத்து வீட்டில் இருந்த நாம் அவரைப் பற்றி அறியவில்லை. இதனை அறிந்ததும் இவ்வளவு பெருமைக்குரியவரா, நமக்குத் தெரியாமல் போய் விட்டதே என்கிறோம்!

இப்படி எத்தனை எத்தனையோ புதுமைகளைக் காணும் போது நாம் அறிந்தவை எல்லாம் அறியாதவை போலாகி விடுகின்றன. இதனை 'அறிதோறு அறியாமை' காணப்படும் என ஒரு நெறியாகக் கூறிவிட்டால் உலகமெல்லாம் அப்பெயரால் பரவிவிடும். ஐன்சுதீன் கொள்கை, நியூட்டன் கொள்கை, இராமன் கொள்கை என்பவை போல வள்ளுவர் கொள்கை எனப்பட்டிருக்கும். அறிவியலின் இலக்கணமே 'அறிதோ றறியாமை' என்பது தான்! ஆக, அறிவியல் கொள்கையைத் தந்த வள்ளுவரை நாம் அறிவியலாளராகக் காணவில்லை! கொள்ளவில்லை! பரப்பவில்லை! அதனால், அவர் கண்ட அறிவியல் கொள்கை, மூங்கையன் கையில் கிடைத்த புல்லாங்குழல் போல ஒலியின்றிக் கிடக்கிறது!

எங்கள் இல்லறத்தால் யாங்கள் அடையும் - நாள்தோறும் அடையும் - புதிய புதிய இன்பங்களைக் காணும் போது இதனை இது வரை அறிந்திலோமே! அறிந்திலோமே என ஒவ்வொரு முறையும் வியப்பு ஏற்படுகின்றது என்பதாகத் தலைவன் கூறும் காமத்துப் பால் செய்தி அறிவியல் இலக்கணம் என்பதை நாம் அறிந்தோ மில்லையாம்!

"அறிதோ றறியாமை கண்டற்றால் இன்பம்
செறிதோறும் சேயிழை மாட்டு"

என்பது அது. வள்ளுவர் காட்டியது அறிவியல் இலக்கணம் எனினும், அதனை நாம் அந்நோக்கில் காணாமையால் கண்டு கொள்ள வில்லையாம்! அறிவியல் நோக்கில் திருக்குறளை நோக்கினால் அவர் கூறும் அறத்தில் அறிவியல் ஊடுபயிராக விளங்குவதைக் கண்டு கொள்ளலாம்.

மழை இல்லாமல் புல்லும் முளையாது என்கிறார். உயிரிகளில் முற்பட்டது 'புல்'. அதுவே மழையில்லா விடில் முளையாது என்றால் பிற விளைவுகளைச் சொல்லவேண்டியது இல்லை என நாம் அறியமுடியும்.

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது"

என்பது அக்குறள். அதே வான் சிறப்பில்,

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்."

என்கிறாரே!

மழை பொழிய வில்லை என்றால் கடலும் தன் தன்மையை இழக்கும்; தான் தரும் வளங்களைத் தராத தாகி விடும். கடலுக்கும் மழை நீர் வேண்டுமா? மழை பெய்யா விடில் கடல் தன்மை, கடல் வளம் குன்றிப்போகுமா?

நாம் ஐயுறும் இதனை மீனவரிடம் கேட்டால் பொழிந்து தள்ளி விடுவார்கள். மீன் வளம் கலிக்காது! உப்புக் கடுப்புமிகுதலால் கடல்வாழிகள் நலிந்து போகும்; முத்துத் திரளாது; பவழக் கொடி படராது; நன்னீரைத் தேடிக் கழிமுகத்திற்கு வலசையாக வரும் மீன் வரத்து இல்லாமல் போய் விடும்! இப்படி அடுக்குவர்!

அறிவியல் பார்வை இல்லாக்கால் எழிலி நல்காவிடின், நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும் என்று கூறியிரார்! தடிந்து எழிலி என மின்வெட்டி இடித்துப் பெருமழை பொழிதலைச் சுட்டியிரார்! கடலுக்கு ஒரு கால்வாய் நீர்வந்து என்ன பயன்?

மாசுக்கட்டுப்பாடு என்பது ஒரு புத்தம் புதுத்துறை; அறிவியல் வளர்ச்சி வழியால் உண்டாகியுள்ள துறை; மாசு என்பது ஒன்றா இரண்டா? சாய்க்கடை, பாசிபடிந்து நாறிய குட்டை, அழுகுபொருள் குவியல், ஆலைக்கழிவு, குமட்டும் வளி, வேதிம ஆவி, வண்டிப்புகை, கடுமொலி, கலப்படம், எரிகரி, புகைப்பெருக்கு என இவை தாமா மாசு? இன்னும் எண்ணுவார் எண்ணப்படி விரியும்! மாசில்லா நீர், காற்று உணவு, காய்கறி, குடிப்பு முதலியவை காணமுடிகின்றதா? மாசுக் கட்டுப்பாடு தன் கடமையைச் சரியாகச் செய்தால், புதுப்புது மாசுகள் உண்டாகுமா? மாசுக் கட்டுப்பாட்டிலேயே மாசு புகுந்துள்ளமை அவ்வப்போது அறியவராமல் இல்லையே! மதுவிலக்கே, கள்ளமதுக் காய்ச்சை ஊக்கவில்லையா?

மாசுக் கட்டுப்பாடு எங்கே தோன்ற வேண்டும்? எவர்க்குத் தோன்ற வேண்டும்? எப்பொழுது தோன்ற வேண்டும்?

மாசுக்கட்டுப்பாடு விதிவிலக்கு இல்லாமல் எங்கும் தோன்ற வேண்டும். மாசுக்கட்டுப்பாடு இவர் அவர் என்னாது எவர்க்கும் தோன்ற வேண்டும். மாசுக்கட்டுப்பாடு எப்பொழுதும் இருந்தாக வேண்டும்! அந்தக் கட்டுப்பாடு மாந்தராகப் பிறந்த அனைவர் மனத்தும் இருத்தல் வேண்டும்! அறங்களில் எல்லாம் தலைப்பட்ட அவ்வறமே

மாசுக்கட்டுப்பாட்டின் மூலநிலை! முழுநிலை! அங்கே தோன்ற வில்லையா மாசுக் கட்டுப்பாடு? எங்கும் ஒழியாது! என்றும் ஒழியாது! மன மாசே எல்லா மாசுகளுக்கும் பிறப்பிடம்! எத்தகைய பெரிய அறிவியல் செய்தி இது! உலகத் தூய்மை உளத்தூய்மையிலேயே **இருக்கிறது என்பதை உலக அறிவியல் அறமாகப் போற்ற வேண்டும் அல்லவா!**

பூ என்பது மலர்; மலர்தல் விரிதல் பொருளது.

பூ, விரிதல் பொருளது ஆதலால், பூதம் என்பதும் விரிதல் பொருள் கொண்டது. நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் என்றார் தொல்காப்பியர்.

ஒலி ஊறு ஒளி சுவை மணம் என்பவை. விண்(வெளி) வளி (காற்று) கதிர் (மீன் கோள்) நீர், நிலம் என்னும் பூதங்களின் வெளிப்பாடுகளாம். பாரிடை ஐந்தும், நீரிடை நான்கும், தீயிடை மூன்றும், வளியிடை இரண்டும் வெளியிடை ஒன்றும் அமைந்தமையை அறிவர் கூறுவர்.

இவற்றைச் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றும்

'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிதல் என்றும் கூறுகிறார்.

"சுவையொளி ஊறோசை நாற்றமென்று ஐந்தின்
வகையறிவான் கட்டே உலகு"

என்றும்,

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

என்றும்,

'ஐந்தவித்தல்'

என்றும்,

'ஐந்தடக்கல்'

என்றும் விரித்துரைப்பார். பூதங்கள் ஐந்தும் கூடியது உலகம் என்பது போல் உடலும் ஐம்பூதத்தால் அமைந்ததே என்பர்.

கால் (நிலம்) குடல் (நீர்) நுரையீரல் (தீ) கழுத்து (காற்று) தலை (வெளி அல்லது விண்) என ஐம்பூத அமைவு கூறுவர். திருவள்ளுவர் உடலில் ஐம்பூதம் இடமாகி இருப்பதை,

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
**ஐந்தும் அகத்தே நகும்."**

என்பார். மாந்தர் குடியிருக்கும் மனையும் அடி முதல் முடி வரை ஐம்பூத அமைவு கொண்டுள்ளமையை அறியலாம். கீழே மண்; அதன் மேல் நீர்; அதன் மேல் தீ; மேல்வளி, வெளி! இனி, **ஊழ் என்பது உலகத் தியற்கை** என்று வள்ளுவர் தெளிவுபடுத்துவார்.

அவ்வூழ் **ஆக்கம் அழிவு** (ஆகூழ், போகூழ்) என **இருவகைப்படும்** என்பார். உலகம் அவ்வாறு இருவகையும் கொண்டிருத்தலை இருவேறு உலகத்து இயற்கை என்பார்.

எப்பூதத்தை எடுத்தாலும் ஆக்கமும் கேடும் அமைந்திருக்கக் காணலாம். எந்த மண் நிலையானதாகக் காட்டி நம்மை நிலைக்கச் செய்கிறதோ அது, நில நடுக்கத்தால் அழிவு செய்கிறது. உள்வாங்குமண் கொண்டுள்ளது. எந்த நீர் இல்லாமல் உலகம் இல்லையோ அந்த நீரே ஆழிப் பேரலையாய் உலகை அழிக்கிறது. எந்தத் தீ இருள் போக்குவதாய் உணவு முதலாம் நலமாக்குவதாய் உள்ளதோ அது, ஊரும் காடும் எரியச் செய்கிறது! எரிமலையாய்க் கக்குகிறது. எந்தக் காற்று இல்லாமல் வாழ முடியாதோ அந்தக் காற்றே மலையையும் புரட்டுகிறது! தலை எப்படித் தப்பும்!

எந்தவிண் பறவை போல் பறக்கவும் அண்டவெளிகள் தந்து அண்டங்கள் சுழலவும் இடமாகிறதோ அதே விண் வானூர்தியை வீழ்த்துகிறது; அண்டப் பிதிர்வு, எரி கொள்ளி வீழச் செய்கிறது.

ஊழ் என்பது இருவேறு உலகத்து இயற்கை என ஒருமுறைக்கு இருமுறை கூறியிருந்தும் ஊழ்வினையாகக் கொண்டு விட்ட நாம் அதனை அறிவியல் என அறிந்து கொள்வோமா? நம் பார்வையே மாறாகிப் போய் விட்டதே! நல் முடிபு எப்படிக் கிட்டும்?

இன்னும் சொல்கிறாரே,

"ஐயததின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து."

என்று. மண்ணில் இருந்தே விண்ணை அளந்து கூறவல்ல அறிவர்களைக் கண்ணேரில் கண்டால் அல்லாமல் இதனை இப்படி வள்ளுவர் கூறமுடியுமா?

அப்படிக் கூறியவர் இருந்தனர்; கணியர், முதுகண்ணர், அறிவர் என்னும் பெயர்களால் சிறப்பிக்கப்பட்டனர்.

"செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரி தரு திசையும்
வறிது நிலைஇய காயமும்
என்றிவை சென்று அளந்து அறிந்தோர் போல
இனைத்தென்மரும் உளரே"

என்ற அறிவூழியில் வாழ்ந்த வள்ளுவர், அவர்களைக் கண்ட தெளிவாலேயே "வையத்தின் வானம் நணிய துடைத்து" என்றார் என்பதில் ஐயம் உண்டா?

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்"

என்பது அது.

இவ்வளவுடன் நில்லாமல் எமக்கு எதுவும் இல்லையே என உழவன் சோர்ந்து கிடந்தால் நிலக்கிழத்தி உழையா அச் சோம்பனைக் கைகொட்டி நகைப்பாள்.

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
**நிலமென்றும் நல்லாள் நகும்"**.

என்கிறார்!

வீட்டுக் கிழத்தியைப் பேணும் முறையில் காட்டுக் கிழத்தியையும் (வயற்காடு, புன் செய்க்காடு, தோட்டக்காடு, பண்ணைக்காடு, ஏர்க்காடு, கூப்புக்காடு) பேண வேண்டும் என்பதைக் கூறும் வள்ளுவர் இம்முறையே முறையாய் நாட்டுக் கிழத்தியை ஆள்வோன் தவறாது பேணல் வேண்டும் என்பதை,

"நாள்தொறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு" (520)

"நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்" (553)

என்பார்! வீட்டு நலம் இல்லாமல் நாட்டு நலம் எப்படியாம்?

"வீடென்ப வீடா வளத்தன" என்று ஆகாமல்,
"நாடென்ப நாடா வளத்தன" ஆவது எப்படி?

"வறிஞன் ஓம்புமோர் செய்யெனக் காத்தான்" என்பது கம்பன் வாக்கு.

வேளாண் அறிவியல் கல்லூரிகள் மல்கிய காலம் இது! பூதவியல் ஆய்வு பெருகிய காலம் இது! விண்ணியல் ஆய்வு கொடி கட்டிப் பறக்கும் காலம் இது!

வேளாண் அறிவியலார் **விதையிலாக் கனி** வகையை (seed less) உண்டாக்கி உள்ளனர். குழந்தைகள் விரும்புவதிலும் பல்லிலா முதியரும் விரும்பும் பழப்பேறு பெற்று மற்றைக் கனிகளிலும் விலையும் ஏற்றி விற்கப்படுகின்றது. பழநாள் வள்ளுவர் இதனை அறிவாரா?

நல்ல மனைவி, அவள் இயல் செயல் எனவே வடிவெடுத்தமைந்த நல்ல கணவன், இவர்கள் இல்லற இன்பம் எப்படி இருக்கும்? இவ்வினாவுக்குத் திருவள்ளுவர், "விதை இல்லாக் கனியைச் சுவைப்பது போலிருக்கும்" என்கிறார்.

> "தாம் வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
> காமத்துக் **காழில்** கனி" (1191)

என்பது அது. காழ் என்பது விதை, கொட்டை, கெட்டித்தன்மை. இல் - இல்லாத. காழில் – விதையில்லாத. நாடி பிடித்துப் பார்த்தல், குறிகளை அறிதல், நோயர் உரை, நீர் மலக்கட்டு அறிதல் என இவ்வளவு தானா மருத்துவ ஆய்வு! எத்தனை கருவிகள்; ஆய்வு முறைகள் ஓரிலக்கம் என்ன பலலக்கம் இருந்தால் உள்ளே வா என்னும் நோய்கள்! இப்படி முற்றாக மாறிப் போய்விட்ட மருத்துவத் துறை! புதுப்புது நோய்வரவு! ஒன்றுக்கு நூறாக மருந்து வரவு! அறுவை! உறுப்பு மாற்றம் என்பன வெல்லாம் உள்ளமை! இக்காலத்திற்குத் தகவருமா வள்ளுவர் மருத்துவம் பற்றிக் கூறியது? என்பாரானால், உழவிலேதான் எத்தனை மாற்றம்? அந்நாள் ஏரும், வண்டியும், ஏற்றமும், அறுவடையும், களமடிப்பும் தேடித்தானே காட்சிப் பொருளாகக் காணமுடிகிறது! ஆயினும் இந்நாளுக்கும் தகுவதாக உள்ளமை கண்டோமே! அவ்வாறுதான் மருத்துவம் முதலிய பிறவுமாம்!

காமத்துப்பால் நிறைவு அதிகாரம் ஊடல் உவகை. அதிலே எண்ணியும் பாராத ஓர் உவகையை - ஊடல் அல்லாத ஓர் உவகையைக் கூறி, ஊடலுக்கு உவமையாக்குகிறார் (1326)

உண்பது இன்பமா உண்டது எரிப்பது (செரிப்பது) இன்பமா, எனின், நாச்சுவை நம்பியர் என்ன சொல்வர்? உண்பது தான் இன்பம் என்பர்! உண்டது செரிக்காமல் படாப்பாடு படுபவரைக் கேளுங்கள்; 'உண்டது செரிப்பது தான் இன்பம்' என்பார்.

வள்ளுவர், "உணலினும் உண்டது அறல் இனிது"

என்கிறார்! மருத்துவ அறிவியலின் **ஒப்பிலா ஒரு தனி முத்திரைச்** செய்தி இதுவாம்!

மருந்து என்னும் அதிகாரத்தில், "மருந்தென வேண்டா" என்றே முதல் முழக்கம் செய்கிறார். நீங்கள் உடலைக் கெடுக்காமல் இருந்தால் மருந்து என ஒன்று வேண்டியதில்லை! ஆம்! வேண்டியதில்லை! என்கிறார். அதற்குரிய அடிப்படையைச் சொல்லவே அவ்வதிகாரம் பாடினார் போலப் பாடுகிறார்.

அற்றது போற்றி உண்க
அற்றால் அளவறிந்து உண்க
மாறல்லது உண்க
இழிவறிந்து உண்க
தீயளவறிந்து உண்க
துவரப்பசித்து உண்க

என்கிறார். இவற்றைக் கடைப்பிடித்தால் நோய் இல்லை! மருந்து வேண்டியிராது!

ஊதை பித்தம் கோழை என்பவை மிகினும் குறையினும் நோயாம் என்றவர் மருத்துவர் கடமையைச் சொல்கிறார்.

நோயை ஆய்க; அது வந்தவகையை ஆய்க; அதனைத் தீர்க்கும் வகையை ஆய்க; செய்யுமுறையால் செம்மையாகச் செய்க என்கிறார்.

மேலும், நோயன் நிலை நோய் நிலை நோயின் கால அளவு என்பனவும் ஆய்ந்து செய்க என்கிறார்.

மருத்துவம் என்பது நான்கு கூறுபட்டது. அவை நோயன், மருத்துவன், மருந்து, உதவியாள் என்பவை என்கிறார். மருத்துவத் துறை எத்தகைய விரிவடைந்தாலும் இந்நாற்கூறும் மாற்றமுறா அல்லவோ?

மருத்துவ வகையுள் ஒன்று **ஒல்லியல் மருத்துவம்** (ஓமியோபதி). அதன் அடிப்படை இலக்கணம், **எதனால் நோய் உண்டாகிறதோ அதனாலேயே அது தீரும்** என்பது.

"இரு நோக்கு இவள் உண்கண் உள்ள தொரு நோக்கு
நோய்நோக் கொன் றந்நோய் மருந்து" (1091)

நோயாக்கும் கண்ணே மருந்தும் ஆகிறது என்பதைக் கூறும் அவர்

"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து".

என்றும் கூறுகிறார்.

இக்குறளைக் கற்ற ஒல்லியல் மருத்துவ வல்லுநர் ஒருவர் எம்மருத்துவத்தின் அடிப்படையே இதுவாம் என்று பாராட்டுகிறார்.

நல்ல தூயநீர்; அது வெப்பமான இடத்தில் உள்ளது. அதே நல்ல தூய நீர் தட்பமான இடத்தில் (நிழலிடத்தில்) உள்ளது. எதை விரும்பிக் குடிப்பர் எனின், நிழலில் இருந்த நீரையே விரும்புவர் என்பது வெளிப்படை. ஆனால் நிழலில் இருந்ததால் மட்டும் நீர் விரும்பத்தக்க தாகிவிடுமா? நீர் நச்சு நீராக, நோய் பரப்பு நீராக நிழற்கண் இருந்தால், நிழலில் இருந்ததால் மட்டும் நல்லது ஆகிவிடாதே என ஒரே பொருளை எடுத்துக்கொண்டு விளக்கும் விளக்கம் அறிவியல் வளம் மிக்கதாம்! பாலும் தூயதாய் அதை வைக்கப்பட்ட இடமும் தூயதாய் இருக்கவேண்டும் அல்லவோ!

"நீரும் நிழலது இனிதே" (1309)

"நிழல் நீரும் இன்னாத இன்னா" (881)

என்பவற்றைக் காண்க.

இறப்பு இயற்கையாக ஏற்படுமானால் நாவெடுத்துப் பேசமுடியாத வண்ணம் உள்ளிழுத்தலும், அதன்மேல் விக்கல் எழுதலும் ஆகிய இயற்கையை உள்ளவாறு கூறியவை அறிவியல் நோக்குடையவையாம்.

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன்"

என்பது அது.

ஒருவன் கொண்டுள்ள அறிவு அவன் மனம் சார்ந்ததாகத் தோற்றம் தரும். மெய்யாக ஆராய்ந்தால் அது அவன் மனம் சார்ந்ததாக இல்லாமல் அவன் சார்ந்த இனம் சார்ந்ததாக இருக்கக்கூடும்! ஆதலால் அவன் மன அறிவா அன்றி அவன் இன அறிவா எனத் தெளிக என்பது அரிய உளவியல் அறிவாம்.

நாம் இன்பமும் மகிழ்வும் கொண்டுள போதில் பொழுது போனதே தெரிய வில்லை! நெடிய பொழுதும் எளிதில் கடந்து விடுகின்றது!

வாட்டும் நோய் - வருத்தும் துயர் - எதிர்பார்க்கும் ஏக்கம் முதலாம் பொழுதுகளில் முட ஆமை நகர்வது போல் பொழுது போவதில்லை!

ஆனால் பொழுது அளவில் நீட்சியோ குறைவோ இல்லை! நம் மனத்தளவிலேயே நீட்சியும் குறைவும் ஆகின்றன.

"ஒருநாள் எழுநாள் போல் செல்லும்" (1269)

எவர்க்கு? "சேண் சென்றார்.

வருநாள்வைத் தேங்கு பவர்க்கு"

என்கிறார்.

"ஊடுக மன்னோ ஒளியிழை யாம் இரப்ப
நீடுக மன்னோ இரா"

என்கிறான் ஒரு தலைவன்! இரவு சுருங்குவதாக அவன் எண்ணலால் நீடுக இரா என்கிறான்!

வள்ளுவர் உளவியல் அறிவுச் சிறப்பை உள்ளவாறு அறிய மூன்றாம் பால் ஒப்பற்ற சான்றாம்.

கடலோடும் நாவாயை இடனறிதலில் சுட்டுகிறார் வள்ளுவர்.

நானில மெங்கும் தமிழர் நாவாய் ஓடிய காலம் வள்ளுவர் காலம்! நாவாய் அக்காலத்தில் காற்றை நோக்கியே செலுத்தப்பட்டமை

"வளி தொழிலாண்ட உரவோன் மருக
களியியல் யானைக் கரிகால் வளவ."

என்னும் புறப்பாடலால் புலப்படும்.

கலங்கவிழ்ந்த நிலையில் "கண்இல் ஊமன்" கடற்பட்ட செய்தியும் உண்டு! உய்ந்தவரும் உண்டு! இக்காலத்தில் மிதவைகள் சேம அச்சுப் போல உதவுகின்றன.

வள்ளுவர் காலத்தில் கலங்களில் பாதுகாப்பு மிதவைகளையும் கொண்டு சென்றனர். அதற்கு 'ஏமப்புணை' என்பது பெயர். ஏமம் - பாதுகாப்பு (1164) நாவாய் - கப்பல்; ஏமப்புணை - பாதுகாப்பாம் கட்டுமரம் போன்றவை. புணையாவது சிலமரங்களை இணைத்துக் கட்டியது. சேம அச்சு பற்றிக் கூறும் புறப்பாடல். சேமக்குப்பியும் உண்டு.

பொன் வெள்ளி செம்பு என்பவற்றைப் பார்க்கிலும் செய்பொருளுக்கு மதிப்புடைய காலம் இவ்வறிவியல் காலம்!

வள்ளுவர் "**செய்க பொருளை**" என்றதை எண்ணினால் அதன் அருமை புலப்படும். அதே போல் அறிவை, "அற்றம் காக்கும் கருவி" என்றதன் அருமையும் நோக்க வைக்கும்.

தீயவற்றில் உண்டாம் பற்றுமையை வள்ளுவர் தெளிவிக்கிறார்! உலகநலம் கருதிய உயர் நெஞ்ச வெளிப்பாடா? தீயவற்றின் கொடுமையை உரைத்துத் திருந்தி வாழச் செய்தலில் சான்றோரும் அரசும் செய்ய வேண்டும் கடமையை வற்புறுத்தியதா? இல்லை! இரண்டுமே தானா?

கையில் இருந்த பொருளை இழக்க இழக்க மேலும் விடாமல் ஆடும் ஈடுபாட்டை ஏற்படுத்துவது சூது என்கிறாரே! (940)

மதுவில் மயங்க மயங்க மாறா மயக்கமே நாட்டமாம் என்கிறாரே (1145)

"இழத்தொறூஉம் காதலிக்கும் சூது"

"களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால்"

இவற்றை அறிவியல் உலகம் அறியாதா? அறிவியலாளர் இக்கேடுகளைத் தடுக்க வேண்டும் கடமை உண்டல்லவா!

அறிவியலும் ஐம்பூதங்களைப் போலவும்,
ஐம்பூதக் கூட்டமாம் உடலமைந்த மாந்தரைப் போலவும்,
ஐம்பூத ஆய்வாகி, ஆக்கமும் அழிவுமாம்
பகுதியாய்க் காணுதலாலும் விடிவு ஏற்படாமல் தான் போகுமா?

**வள்ளுவ அறிவியல் அறவியல், அருளியல் சார்ந்ததேயன்றி, அழிவியல் சார்ந்தது இல்லையே!**

வள்ளுவ வாழ்வியல் வையக வாழ்வியல் ஆனால், அறிவியல் அறவியலாய் அருளியலாய் இயங்கும்!

ஒன்று படாத் தமிழரா உலகுக்கு ஒன்றுபடக் குரல் கொடுப்பார்!

**உலகமெய்யன் ஒருவன் பார்வையில்**
**பெய்யா மொழியாம் வள்ளுவம் வாய்த்தால்**
**நம் கனவு நனவாகலாம்!**

# 4. திருக்குறளில் கலைச்சொல்

**நா**ம் அறிவியல் வளர்ச்சிக்குத் தக்க கலைச் சொற்களைக் கொண்டிருக்கவில்லை. வளரும் துறைகளுக்குத் தக வளமான கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்கிக் கொள்ள இயலாது என்கின்றனர் அறிவுத் துறைகளில் ஈடுபட்ட அறிஞர் சிலர்.

முன்னர்க் கணினி, அதன் முன்னர்த் தட்டச்சு, தொலைவரி ஆகியவற்றுக்குத் தமிழ் மொழி பயன்படாது என்றனர். அவற்றை ஆங்கிலம் போலவே பயன் கொள்ள முடியும் என்பதை மொழிப் பற்றுமையும் மொழியறிவும் துறையறிவும் உடைய அறிஞர்கள் மெய்ப்பித்துக் காட்டிய பின் அவர்கள் வாயடைத்துப் போகாமல், கலைச் சொல் வளம் தமிழில் இல்லை என்றும், புதிது புதிது தோன்றும் அறிவியல் வளர்ச்சிக்கு அவ்வயற் சொற்களையே பயன்படுத்த வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

தமிழில் கலைச்சொல் தொகுக்கப்பட்டு பலலக்கம் சொற்கள் ஆட்சியர், அலுவலர், அயலர், மொழிப்பற்றுமை இல்லார் என்னும் பல்குழுப் பாழ்களால் முடக்கப்பட்டு முகம் காட்ட இயலாமல் உள்ளனவே அல்லாமல், கலைச் சொற்கள் இல்லை என்னும் கற்பனை பொய்யானதாம்! “இந்தியில் தடையில்லையாம்; தமிழில் தடையாம்” போலிமை வாழ்வே வாழ்வெனக் கண்டார் வாயுரை இவையாம்.

ஊர்தி, வானவூர்தி, நாவாய், கலங்கரை விளக்கம், திசை காட்டும் கருவி, வானக்குடை என்பனவெல்லாம் தமிழ் வழக்குச் சொற்களா இல்லையா?

மிதிவண்டி, தொடரி, உந்து, பேருந்து, வானொலி, ஒலியிழை, திரைப்படம், தூக்கி, எக்கி, உழுபொறி, இழுவை, அகழ்வான் இவையெல்லாம் வழக்கில் உள்ளனவா இலவா?

"விசும்பின் வலவன் ஏவா வான ஊர்தி"

என்பது பழந்தமிழ்ப் புறப்பாடல் அல்லவா! அதில் வான ஊர்தி வருகின்றதே! அதிலும், இயக்குவோன் இருந்து இயக்காமல் தானே இயங்கவல்லது என்பதை "வலவன் ஏவா ஊர்தி" என்கிறதே! இன்று நாம் காண்கிறோம் இல்லையா?

இழுக்கும் மாடு குதிரை யானை மான் என்பவை இல்லாமல் பொறியால் இயங்கும் ஊர்தி,

"பூணி (பூட்டி இழுப்பது) இன்றியும்

பொறியின் இயங்கும் மாண் வையம்" (ஊர்தி) என்பது பேசப்படுகின்றதே!

கப்பல் கவிழ்ந்தால் தப்புதற்கு 'ஏமப்புணை'

வண்டி அச்சு முரிந்தால் 'சேம அச்சு'

குளிர்க்கும் வெயிலுக்கும் தன்னிலை மாறாமல்
காக்க வல்ல 'சேமச் செப்பு'

என்பன வெல்லாம் சொல்லப் பட்டால் அவை இல்லாமல் – கலைச் சொல் இல்லாமல் – நாம் அறிய முடியுமா?

கோயில் கோட்டை கோபுரம் அணைக்கட்டு சுரங்கம் குடைவரை என்பவனவற்றையெல்லாம் கண்ட தமிழினம் கலைச் சொல் வறிய இனமாக இருக்க முடியுமா?

சிலப்பதிகாரத்தில் வரும் கோட்டைப் பொறிகளை மட்டும் எண்ணுங்கள் :

மிளையும் கிடங்கும் வளைவில் பொறியும்
கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய் பொன் னுலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை அடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவும் சீப்பும் முழுவிறற் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலும் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில்"

என்பது சிலப்பதிகார அடைக்கலக் காதைச் செய்தி. மதுரை அரண்மனைக் கோட்டை கொத்தளம் பற்றியது.

ஒரு நாட்டின் அடிப்படைத் தேவை ஊண், உடை உறைவிடம். இம்மூன்றும் தட்டில்லா நிலையமைந்த நாடே நாடு! "நாடென்ப நாடா வளத்தன" என்னும் இலக்கணம் உடையது. அவ்வளம் குன்றா நாட்டிலே தான் கலைவளப்பெருக்கு வெள்ள மெனப்பாயும். நம்மவர் இசைக்கலைப் பெருக்கு தோற்கருவிகளை எண்ணிய அளவாலே புலப்படும்:

"பேரிகை படகம் இடக்கை உடுக்கை
சீர்மிகு மத்தளம் சல்லிகை கரடிகை
திமிலை குடமுழா தக்கை கணப்பறை
தமருகம் தண்ணுமை தாவில் தடாரி
அந்தரி முழவொடு சந்திர வளையம்
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளம் துடுமை சிறுபறை அடக்கம்

மாசில் தகுணிச்சம் விரலேறு பாகம்
தொக்க உபாங்கம் துடிபெரும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே."

என்பதில் தோற்கருவிகள் 31 இடம் பெற்றுள்ளன. இவற்றின் மேலே விரிந்த அளவும் மிகப்பலவாம். இவையெல்லாம் கலைச்சொற்கள் தாமே.

இனி நம்மவர் கலைச் சொற்களை ஆக்கிக் கொண்ட உத்திகள் எவை? ஒன்றன் ஈர்ப்பாற்றல் எங்கே அடங்கியுள்ளது? அதுகொண்டு சொல்லாக்கம் செய்தனர். கரிசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி என்பவை ஏன் அப் பெயர்களைப் பெற்றன. நேர் நேர் இலைகளையுடையவை ஆதலால் கண்ணி எனப்பட்டன. பசிய இலை எனினும் அதன் சாறு காய்ந்த அளவில் கருநிறம் கொள்வதால் கரி யாயது. இலை பொன்னிறம் உடைமையால் 'பொன்' எனப்பட்டது. தாமரையின் நிறம் கொண்டதால் 'தாமிரம்' ஆயது. சிவப்பு நிறம் கொண்டதால் செம்பு, செப்பு, செம்பொன் எனப்பட்டது. ஊதும் வாயமைப்பும், மோர்கடையும் மத்தமைப்பும் கொண்டமையால் ஊமத்தை எனப்பட்டது. சிவந்த கொண்டை உடைமையால் சேவல் எனவும், மைந்நிறம் உடைமையால் மயில் எனவும், கிள்ளி எடுக்கும் இயல்பால் கிள்ளி கிள்ளை கிளி எனவும், கொக் கொக் எனக்குரல் தரலால் கொக்கு எனவும் பெயர் பெற்றன என்பதை அறியின் சொற்படைப்பு உத்திகள் புலப்படும், நாம் வாழ்கிற நாள்களெல்லாம் வாழ்நாள்கள் என எண்ணுகிறோம். அது சிலர்க்குத் தான் வாழ் நாள்களாக உள்ளன. வள்ளுவர், வாழாமல் வாழ்கின்ற பேர்களை ஒருபொழுதும் வாழ்வதறியார் எனச் சுட்டுகிறார்.

அவர்களைத் தம் வாழ்நாளை அன்றி உலகியல் வாழ்நாளையும் நாள் நாளாகக் கொண்டுள்ளமையைத் தவறாமல் நாள் காட்டிகள் காட்டிக் கொண்டும், கிழிபட்டுக் கொண்டும் இருக்கும் 'நாள்காட்டிகள்'

நமக்கு நன்றாகக் காட்டிக் கொண்டே உள்ளன. இருபதாம் நூற்றாண்டு நாட்காட்டி, நாட்குறிப்பு, நாள் வழி நடை என்பவற்றை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த வள்ளுவனார் தந்த கலைச்சொல் கொண்டே வழங்குகின்றோம்.

அவர் வாழ்நாளையும் அதன் நிலையாமையையும் கண்ணிற் காணக் கதிரோனைக் காட்டி ஓவியமாகத் தீட்டி அறிவுறுத்துவார் போல்,

"நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்"

என்றார். நாள் என்பது கதிர். அது எழலும் விழலுமாகக் காட்டி ஒரு கால அளவைத் தருகின்றது. அதனை நாள் என்கிறோம். ஒருநாள் கழிவு என்பது காலக்கழிவு அன்று; நம் வாழ்நாளில் ஒன்று கழிந்தது என்பதைக் காட்டுவது; ஒவ்வொரு நாளும் நம் உயிரைத் தவறாமல் அறுத்துக் கொண்டே இருக்கும் வாள் அது. அதனால் நிலையாதொழியும் வாழ்வை நிலைபெறு செயல்களால் அழியாமையை ஆக்கிக் கொள்ளுங்கள் என ஏவுகிறார். நுண்ணிய ஆய்வு வல்லார் நாளென ஒன்று போல் காட்டி என்று வரும் வள்ளுவத் தொடரைக், கலைச் சொல்லாகக் கண்டு நாளையும் காட்டியையும் கொண்டு இடையே தள்ளுவதள்ளி 'நாட்காட்டி' எனக் கொண்டனர். அதன் பின்னர், நாட்காட்டி, நாட் குறிப்பு முதலாம் கலைச் சொற்கள் விரிந்தன.

'உயிரீரும் வாள்' என்பதன் நுணுக்கம் தெரிந்தவர் உயிரைத் தவறாமல் தின்னுவதால் 'தினம்' என்றனர். தின் + அம் = தினம். இவ்வாறு நாள் தின்னுதலைக் கலிப்பாடல் ஒன்று கரைகின்றது (119). அது :

"அகல்ஞாலம் விளக்கும்தன் பல்கதிர் வாயாகப்
பகல் நுங்கியது போலப் படுசுடர் கல்சேர"

என்பது. நுங்குதல் – தின்னுதல். நுங்கு தின்னல், நோண்டித் தின்னல் என்பவை. நுங்கு தின்றவனை விட்டு விட்டு நோண்டித் தின்றவனைப்

பிடித்துக் கொண்டது போல என்பது பழமொழி. "நுங்கினான் பசிகள் ஆற" என்பது இரட்சண்ய யாத்திரிகம்.

நாள்தொறும் என்னும் பழஞ்சொல் தினந்தொறும் என்னும் புதுவடிவு தமிழ்வடிவு பெறுகின்றது என்பதை அறியின்,

தினமணி, தினத்தந்தி, தினசரி, தினமலர் முதலிய நாளிதழ்களின் பெயர்களில் உள்ள 'தினம்' வேற்றுச் சொல் அன்று; தமிழ்ச் சொல்லே என்பதைத் தெளியலாம்.

வள்ளுவர் காலம் ஏடும் எழுத்தாணியும் வழக்கில் இருந்த காலம். ஆணி, ஊசி என்பவை எழுத்தாணியைக் குறிப்பன. ஏடும் எழுத்தாணியும் என்பவை இணைச்சொற்கள். ஆனால், 'எழுதுகோல்' இன்றைய ஆட்சி. இக்கலைச் சொல்லை வழங்கியவர் எவர்? திருவள்ளுவர் தாமே!

கணவனைப் பிரிந்த தலைவி, அவன் மேல் குறை பல காண்கிறாள். அவன் பிரிவு நீங்கி வந்து சேர்ந்தான். அவன் மேல் கண்ட குறைகள் எல்லாமும் காணாது ஒழிந்தன. இதனைத் திருக்குறள்,

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து"

என்கிறது (1285).

'எழுதுங்கால் கோல்' என்பதில் இடைநின்ற கால் என்பதைத் தள்ளி எழுதுகோல் ஆக்கிக் கொண்ட அருமையால் ஒருகலைச் சொல் ஆகிவிட்டது.

வண்டி, பொதி, தூக்கு, களஞ்சு, மஞ்சாடி, குன்றி என்பனவெல்லாம் நிறை கோல் தொடர்பான சொற்கள். நிறைகோல் சமன் கோல், ஞமன் கோல் எனவும் வழங்கப்பட்டன. தூக்கி நிறை காண்பதால் தூக்கு என்றும், 'துலை' என்னும் ஏற்றம் போன்ற

அமைவால் துலை என்றும், வெள்ளியால் பூண்பிடிக்கப்பட்டமையால் வெள்ளிக் கோல் என்றும் பெயர் வழங்கின.

சரியான நடுவுநிலைச் சான்றாய அது சீர்தூக்கும் கோல், செப்பம், சீரை எனவும் பட்டது. சீரை புக்க தூயோன் என்பது செம்பியன் ஆகிய சிபியின் புகழ். சீர்த்தி மிகு புகழ் என்பது தொல்காப்பியம். சீர்த்தியின் இடத்தைக் கீர்த்தி பற்றிக் கொண்டது.

'சமன் செய்து சீர் தூக்கும்கோல்'

என்னும் வள்ளுவத் தொடர் வழியே 'சமன்கோல்' என்பதும் 'சீரை' என்பதும் கலைச் சொற்களாம் தகவு பெற்றன. .

தண்ணுமையாசிரியன் கையால் செய்யும் கலைத்திறத்தைக் கைத்தொழில் என்கிறது சிலப்பதிகார அரும்பத உரை (3 : 54). அதனையே அடியார்க்கு நல்லாரும் ஏற்றுப் போற்றினார்.

"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக் கொள்"

என்பது நாமக்கல்லார் பாடல். கைத்தொழில் பெருக்கமிக்க இக்காலத்துக் கலைச் சொல் பழங்கொடை அல்லவா.

"வித்தகத் தியன்றதன் கைத்தொழில் காட்டி" பெருங்.1 : 38 : 196

"தத்தம்.. கைத்தொழில் தோன்ற" பெருங். 1 : 58 : 45

"கைத்தொழில் நுனித்த வித்தக வாளர்" பெருங். 2 : 4 : 138

கைத் தொழில் 'கைவினை' எனவும் படும். சிலம்பு. 16 : 105

திருவள்ளுவர் உழவரைக் 'கைசெய் தூண் மாலையவர்' என்கிறார். அவர் தம் **கைம்மடங்கின்** துறவர்க்கும் வாழ்வில்லை என்கிறார் (1035, 1036) கைப்பொருள் என்பதையும் சுட்டுகிறார் (371). கை என்பதற்கு ஒழுக்கப் பொருள் தந்தமண் தமிழ்மண். கைக்கோள்; கைக்கிளை; கைம்மை என்பவற்றை நினைக.

வான் ஒழுக்கே ஒழுக்க மூலம் ஆவதுபோல்
கையால் செய்யும் தொழில்களின் செப்பமே செவ்விய வாழ்வுமூலம்
என்பது காட்டும். செயல் என்பதன் பொருளே செம்மையானது என்பதாம்.
கையறுதல் என்பது செயலற்றுப் போதலாம்.

ஒன்று இல்லாமல் முடியாது எனின்ன அதனை 'இன்றியமையாதது' என்கிறோம். இதனை இவ்வடிவிலேயே திருக்குறள் தருகிறது.

'இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்' (961)

இச்சொல் இன்றுவரை தேயாமல் தன்நிலையில் உள்ளது. வேண்டியது. தேவை என்பன இப்பொருளில் வரினும் இச்சொல் போன்ற அழுத்தம் அற்றவையாம்! அவசியம் என்பது அவசியம் இல்லா அயன்மை!

இது கால் வாரியங்கள் பெருகியுள. வாரியத் தலைமையராதல் அமைச்சர்க்கு ஒப்பாம் ஒரு பதவியாக உள்ளது. சோழர் காலத்திலேயே வாரியங்கள் இருந்தன.

"புயலென்னும் வாரி" (4)

"வாரி பெருக்கி வளம்படுத்து" (512)

வாரியின் கொடை, வாரியமாம்.

நாளைப் பகல் என்றும் இரவு என்றும் பகுத்தல் பண்டு தொட்ட வழக்கு. பகல் இரவுகளையும் முற்பகல், பிற்பகல்; முன்னிரவு பின்னிரவு எனப்பகுத்தலும் பண்டு தொட்ட வழக்கு!

வள்ளுவர்,

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்."

என்பது ஆங்கிலவர் கூறும் ஏ.எம்; பி.எம்: என்பவற்றுக்கு இயல்பாக வாய்த்த கலைச் சொல்லாக்கம் ஆகிவிட்டது. நம் வழக்கில் பெருக ஊன்றிய செய்தி இது.

கோயில் அறங்காவலர் துறைக்கு அறங்காவலரை அமைத்து அவர்கள் பதவிக்குத் தக்கார் எனப் பெயர் சூட்டியுளர். அத்தக்காரை வழங்கியவர் திருவள்ளுவர்,

"தக்கார் இனத்தனாய்" (446)

"தக்கார் தகவிலர் என்பது" (114)

என்பவை அவை.

ஆழ்மனம் பற்றி மெய்யியல் ஆய்வாளர் பொழிகின்றனர். அவ்வாழ்மனத்தை 'உள் உள்' என்பார் வள்ளுவர்;

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து. (1057)

உள்ளவற்றையெல்லாம் இழந்துவிடுதல் 'திவாலா', ஐ.பி. வாங்கல், மஞ்சள் கடிதம் வாங்கல் என வழங்கப்படுகின்றது. இதனைத் திருவள்ளுவர் 'உள்வீழ்தல்' என்கிறார்.

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று" (955)

என்பது அது. உள்ளனவெல்லாம் இல்லையாய் வீழ்ந்துபடுதல் உள்வீழ்தல் எனப்பட்டதாம்.

இது கால் பெருகிக்காணும் நோயுள் ஒன்று மாரடைப்பு என்பது. இன்பமா துன்பமா இழப்பா பெருநிறைவா இவற்றுவழி உண்டாகும் இன்பதுன்ப அதிர்வுகளால் ஏற்படுவது மாரடைப்பு! இதனை 'அதிர்வு நோய்' என்கிறார் வள்ளுவர்.

"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்." (429)

என்பது அது.

வானொலியில் 'மனைமாட்சி' என ஒரு நிகழ்ச்சியுண்டு. மனை மாட்சி கற்பிக்கும் மனையியல் கல்லூரிகளும் இந்நாளில் உண்டு. இவை, 'மனைத்தக்க மாண்பு' (51)

"மங்கலம் என்ப மனைமாட்சி" (60), "மனைமாட்சி இல்லாள் கண்" (52) என்னும் வள்ளுவக் கொடையாம்.

'ஊதியம்' என்பது பெருவழக்குச் சொல்லாக இந்நாள் உள்ளது. வேலைக்கு ஊதியம், ஊதியத்தின் மேல் ஊதியம் என்பவை உள. மிகுதல் பொருளது அது. ஊதும் வாய், பலூன் என்னும் ஊத்தாம் பெட்டி, குளிர்மிக்க ஊதைக் காற்று, மிகச் செலவழிக்கும் ஊதாரி, ஊதுகாமாலை, ஊத்தம் போடல், ஊதி விட்டது என்பனவெல்லாம் பருமை வழிப்பட்டவை.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு." (231)

"முதலிலார்க்கு ஊதியம் இல்லை" (449)

"ஊதியம் என்ப தொருவர்க்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்." (797)

"பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்
டூதியம் போக விடல்." (831)

இவை வள்ளுவத்து வரும் ஊதியம் காட்டும் குறள்கள்.

பல்கலைக்கழக மானியக் குழு என ஒன்று உள்ளமை உலகறி செய்தி. மானியக் குழு இக்காலத்து வழங்கப்படுவது 'நல்கைக்குழு' என்பது. நல்குதல் வழங்குதல் கொடுத்தல். தொல் பழஞ்சொல்லாகிய நல்குதல்.

"தாம் வேண்டின் நல்குவர் காதலர்" (1150)

"அவர் நல்குவர் என்னும் நசை" (1156)

நல்கைக் குழு நல்காமையும் உண்டு தானே!

"நசை இயார் நல்கார் எனினும்" (1199)

"பரிந்தவர் நல்கார்" (1248)

என்பவை வள்ளுவர் கூறும் நல்காமை.

வெளிநாட்டுக் கல்வி, வெளிநாட்டு வேலை, வெளிநாட்டுச் செலவு என உலகமயம் ஆகிவருதல் கண்கூடு. உலகமயம் என்னும் பெயரால் மொழி, இனம், பண்பாடு, நாகரிகம் முதலானவை அழிவு வழியில் விரைந்து செல்லுவதும் கண்ணுள்ளார்க்கு வெளியாம் கண்கூடு.

வெளி நாடும், வெளி நாட்டவரும், புத்தேளிர் நாடு என்றும் புத்தேளிர் என்றும் வள்ளுவக் கலைச் சொல் வழங்குதல் அறியலாம். புதியதோர் இடத்தில் இருந்து வந்தவரும் அவர்நாடும் புத்தேளிர் நாடு எனவும் புத்தேளிர் எனவும் வழங்கப்பட்டனர் என்பது நச்சினார்க்கினியர் வழங்கிய கலித்தொகை உரையால் விளங்கும்.

இந்நாளில் உள்நாடு வெளிநாடுகளில் தூதர் என்பார் உளர். அவர் அவரவர் அரசு சொல்வதைக் கூட்டாமல் குறைக்காமல் மாற்றாமல் மறைக்காமல் கூறியது கூறிய வாறே கூற வேண்டியவர். அவர் தம் தனித்த எண்ணம் சொல் ஆயவற்றுக்கு ஆங்கே வேலை இல்லையாம். இதன் இலக்கணத்தை இரண்டே எழுத்துக்களில் 'தூது' என்கிறார் வள்ளுவர். தூவானம் மழைத் துளியைத் தூவுவது கண்டது தானே (தூறல்). காற்றில் தூசிபோகத் தவசத்தைத் தூற்றுவதும் காண்பது தானே! ஒருவரை ஒருவர் பழிதூற்றுவது அறியாததா? சொல்லியதைச் சொல்லியவாறு சொல்லல் 'தூ தூ' என்றாம். அவ்வாறு கூறல் வெறுப்புக் குறியாகிவிட்டமையால் அதனை விலக்கத் தூது எனக் குறிலாகி நின்றதாம்.

ஒரு கூட்டம்! இவர் தலைவர் என்பதை ஒருவர் முன் மொழிகிறார்; அதை ஒருவர் வழி மொழிகிறேன் என்கிறார். இவ்வழி மொழிதல் என்பது வள்ளுவத்தில் 'வழியுரைத்தல்' எனப்படும். தூதுரைப்பான், வினையுரைப்பான், எண்ணியுரைப்பான் எனப்படும் அவன் வழியுரைப்பான் எனவும் சொல்லப்படுவான்,

"தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு" (688)

என்பது அது. அதுவே வழிமொழிதல் மூலமாம்.

சூது என்பதோர் அதிகாரப் பெயர். சூது, 'சூழ்து' என்பதன் இடைக்குறை. வட்டமாகச் சூழ்ந்து அமர்ந்து ஆடுவது ஆதலால் அப்பெயர் பெற்றது. சூழ்ந்தாடும் அது சூழ்ச்சிக்கும் ஏமாற்றுக்கும் குடிகேட்டுக்கும் காரணமாக இருக்கும். சூது, சூதர், சூழ்ச்சி என்பவை எல்லாம் ஏமாற்று, வஞ்சம், குடி கேடு என்னும் பொருள் தருவதை அறிக. இச் சூதே குதிரைப் பந்தயம், பரிசுச்சீட்டு, குலுக்கல் சீட்டு முதலாய பொருள்பறி ஆட்டங்களாம். அதிகாரத் தலைப்புகள் கலைச் சொல் சிறப்புடைமை என்பதை எண்ணல் ஒரு தனி ஆய்வாம்.

இறைமைக் கேடு செய்வாரெல்லாம் 'இறையாண்மை' பேசத் தவறுவது இல்லையே! இறைமாட்சி என்பது வள்ளுவப் பொருட்பால் முதல் அதிகாரம் ஆயிற்றே!

'ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை" (541)

"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்" (547)

இவையல்லவோ இறையாண்மையாம் செங்கோன்மை!

தவம் என்பதோர் கலைச் சொல். அதன் மூலம் 'தவ்' என்பது. தவ் என்பது சுருக்குதல் பொருளது.

"கவ்வையால் கவ்விது காமம் அதுவின்றேல்
தவ் என்னும் தன்மை இழந்து". (1144)

தவ் என்பது தவிர், தவிர்த்தல் என்றாகிச் சுருக்குதல் விலக்குதல் நீக்குதல் பொருள்களைத் தரும்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்" (941)

"யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்" (36)

என்பனவற்றில் நீக்குதல் பொருள் வருதலால் விலக்கலும் சுருக்கலும் தெளிவாம்.

பிறப்பறுக்க, லுற்றார்க்கு உடம்பு மிகை

என்பதால் மேலும் பற்றறல் தெளிவாம் (345)

'ஊழ்' என்பதோ உலகத்து இயற்கை என்பதைக் கூறும் அரிய கலைச் சொல் (374) இருவேறு உலகத்து இயற்கையது ஊழ். இருவேறு இயற்கை என்பது ஆக்கமும் அழிவுமானவை. அவை ஆகூழ், போகூழ்; இழவூழ் ஆகலூழ் எனவும் படும் (371,372) நன்று அன்று, நல்லவை; தீயவை என்பனவும் அவை (375, 379).

எந்த நீர் நலமாக்குமோ அந்த நீர் கேடாக்கவும் செய்யும். இது வான் சிறப்பில்,

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை." (15)

எனவரும்.

சோறாக்க உதவும் தீ, வீட்டையே எரிப்பதில்லையா?
நிலைவைத்து வாழவைக்கும் நிலம், நடுக்கத்தால்
நிலை குலுங்க வைப்பதில்லையா?

இவை ஒவ்வொன்றும் இருவேறியற்கையாதலை விளக்கும்.

'காலாழ் களர்' 'அண்ணாத்தல் செய்யா தளறு' என்பவை நிலத்தின் ஊழ். உலகம் உருண்டை என்பதை 'உலம்' வேரே காட்டும்.

உலகம் உலவுவது (சுழல்வது) என்பதை 'உலா', 'உலவுதல்' என்பவை காட்டும்

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்"

அது வலமாகச் சுழலும் என்பது ஊர்வலம், நகர்வலம், திருக்கோயில் வலம், "வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு" என்பவை காட்டும்.

ஞாலம் என்னும் சொல் உலகப் பொருளதே.

காலத்தினால் செய்த நன்றி ஞாலத்தின் மாணப் பெரிதாம் என்பது குறள்.

ஞாலுதல் தொங்குதல். ஞான்று கொண்டான் (நான்று கொண்டான்) என்பது கழுத்தில் கயிறுகட்டித் தொங்குதல் போல்வது.

வையம், வையகம், வைப்புழி என்பவை உலகத்தைக் குறிக்கும் சொற்கள். இவற்றின் மூலம் 'வை'. வைத்திருக்கும் பேழையன்னதாம் நெல் 'வை' என்பதாம்.

வையம் இருக்க வாழ வழியில்லையே எனச் சோர்ந்திருக்கும் இழிமையை,

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்."

என்னும் குறள்.

என்னிடம் வளமும் விளைவும் இருக்க உழைத்துப் பயன் கொள்ளாமல் வாளா கிடக்கிறாயே, நீ வாழவா செய்வாய்? என நகைக்குமாம் நிலம்.

பயிர்வகை, செடி கொடி மரவகை என்பவை எவ்வளவு வளங்கள்! உயிர்வகை தாம் எத்தனை வளங்கள்! நீர்வளம் எண்ணி முடியுமோ?

மண்எண்ணெய், கல் எண்ணெய், நிலக்கரி, தங்கம் முதலாம் வளங்கள் எத்தகையவை! இவற்றையெல்லாம் வைத்திருத்தலால் தான், வையம், வையகம், வைப்புழி எனப்பட்டதாம்.

வையகம் மட்டுமா, இப்படி வானகத்துத் தோன்றுவன எத்தனை விண்மீன்கள்! நாள்மீன் ஒளியைக் கொண்டு ஒளிசெய்யும் கோள்மீன்கள் எத்தனை? இவையெல்லாம் கூடிய பேரண்டத்திற்கு என்ன பெயர்?

'வியனுலகம்' - வியல் வியன்; விரிந்த உலகம்

'விரிநீர் வியனுலகம்' என்பது வள்ளுவம் (13, 19) 'வியன் ஞாலம்' என்பதும் அது (1018)

பறவைகள் சிறகுடையவை. அச்சிறகு இருபாலும் அமைந்தவை. பருந்து வட்டமிடக் காணும் பெட்டைக் கோழி குஞ்சுகளைச் சிறகுள் ஒடுக்கும். இவ்வாறு பறவைகள், குஞ்சுகளைச் சிறகுள் ஒடுக்கிக் காத்தலை,

"புள்ளினம்தன் கைச்சிறகால் பார்ப்பொடுக்கும்"

என்பது முத்தொள்ளாயிரம்.

சிறை வள்ளுவரால் ஆளப்படும்.

"சிறை காக்கும் காப்பு எவன்செய்யும்?
சிறைநலனும் சீரும் இலரெனினும்"

கற்சிறை என்பது அணைக்கட்டு. வழியடைக்கும் கல் சிறையை வள்ளுவம் கூறும். சிறை என்பது பாதுகாப்புப் பொருளது. ஆனால் அது பாதுகாப்பா செய்கின்றது? அது செய்யும் பாழுக்கு இணை அப்பாழேயாம்!

'நோன்பு' நாளும் பொழுதும் பெருகுகின்றது. ஆனால் அது பெயரையும் பெயர்ப் பொருளையும் இழந்து விட்டது. 'நோம்பு' ஆயது! முப்பொழுதும் நாற்பொழுதும் உண்ணலாம் – பழம் – பண்டம் எனச் சிற்றுண்டி வகை! பருகலாம் பால் மோர் இளநீர் பிற பிற குடிவகை. ஒரே ஒரு வேளை சோறுண்ணல் தான் வேண்டும்! அவ்வளவே!

'நெய்யுண்ணோம் பாலுண்ணோம்'

என்னும் ஆண்டாளர் நெறிமுறை மாண்ட வகை இது.

நோன்பு = வலிமை; மனக்கட்டுப்பாடு. "உண்ணாது நோற்பார் பெரியர்" பிறர் சொல்லும்; இன்னாச் சொல் நோற்பாரின் பின் என்பது நோன்பும் நோன்பினும் நோன்பும். மனவுரன் உடையார்க்கு அன்றிப் பிறர்க்கு இந்நோன்பு கூடுமோ?

நீத்தார் என்பதொரு கலைச் சொல்! என்ன நீத்தார்?

தம்நலம் நீத்தார்! தம் உடம்பும் மிகையென நீத்தார்! அவரே செயற்கரிய செய்யும் பெரியார்.

'ஓம்' என்பதோர் அரிய சொல்! இணைப்புச் சொல்!

அதன் வழிப்பட்டது ஓம்புதல்! 'விருந்தோம்பல்' ஓர் அதிகாரப் பெயர்.

'ஓம்' சமயச் சொல்லாயது; தன் சார்பு வன்மையால், தன் சால்பு இழந்து வெறுமையுற்றது. குப்பையில் எறியப்பட்ட குல வயிரம் ஆயிற்று! ஓம் இணைக்குமேயன்றி எவரையும் எதனையும் பிரிக்காது.

'துப்புக் கெட்டவன்' துப்புரவு என்கிறோம்.

துப்பு என்பதற்கு வலிமை, செம்மை முதலாம் பொருள்கள் உண்டு. அதன் மூலம் 'துய்ப்பு'.

வள்ளுவர் நாளிலேயே துய்ப்பு 'துப்பு' ஆகிவிட்டது. அதனால்,

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை"

என்றார். 'துய்ப்பார்' 'துய்ப்பு' என்பவை அவை. துப்புக் கெட்டவன் - துய்ப்புக்கு வழியற்றவன் என்பதாம். துய்ப்பால் உண்டாம் வலிமை துப்புரவாம். அது தூய்மைப் பொருளில் துப்புரவு ஆகிவிட்டது.

நன்றி என்பது நல்லது என்னும் பொருளதே; அது பொது நலம் சுட்டுவது. செய்ந்நன்றி என்பது தனிப்பட்ட ஒருவர்க்குச் செய்யப்பட்ட நல்லதாம். இவ்வேறுபாட்டை வள்ளுவர்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்று விளங்க வைத்தார். செய்ந்நன்றி என்பது செய்த நன்றி என்பது மட்டுமன்று; செய்தநன்றி செம்மையான நன்றி என்பதுமாம்!

பதனீரை வழங்குதலும் கள்ளை வழங்குதலும் ஒப்பாகுமா? ஆதலால் செய்வது செம்மையானதாக இருப்பதே செய்ந்நன்றியாம்.

இனிப் பகுத்து உண்பது 'பாத்தூண்' ஆகும். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்ற அவரே, 'பாத்தூண்' மரீஇயவனை என்றும் ஆள்வார். வள்ளலார் வாழ்வியல், இவ்வள்ளுவக் கொடையாம்!

'அகராதி' புதுவரவு! ஆனால் அச்சொற்கொடை, தொல்காப்பியமும் வள்ளுவமும் தந்தது.

"அகர முதல னகர இறுவாய்" என்றது தொல்காப்பியம்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" என்றது வள்ளுவம்.

அகர முதலி, 'அகர முதல' என்பது கொண்டு வந்தது.

அகராதி, அகரமுதலவும் ஆதியும் கொண்டு அமைந்தது.

கலைச்சொற்பஞ்சம் காணா மொழி கன்னித் தமிழ் மொழி! அதனால் கலைமலி தமிழ் என்றனர் முன்னவர்.

## 5. திருக்குறளில் பெண்மை!

### 1. பெண்ணே பெருந்தக்கது

திருவள்ளுவர் பார்த்த பார்வையின் ஆவணச் சான்று திருக்குறள். அதில் 'பெண்ணே பெருந்தக்கது' என்பதை முப்பாவிலும் சுட்டியுள்ளார். பெருந்தக்கது – பெருமைக்குரிய தகுதியுடையது. 'வாளா' கூறும் பெருமை அன்று அது. தன் தகுதியால் கொண்டது என்பதை விளக்கப் "பெருந்தக்கது" என்று ஒரு வாய்பாடு கொண்டார். அவ்வகையால்,

"பெண்ணில் பெருந்தக்கது யாது?" என்று அறத்துப் பாலில் வினா எழுப்பி.

"பெண்ணில் பெருந்தக்கது இல்" என்று பொருட் பாலில் உறுதி செய்து,

"பெண்ணே பெருமை உடைத்து" என்று காமத்துப் பாலில் முடிவு கட்டினார்.

### 2. பெண்ணே கற்பகம்

கற்பகம் என்பது புனைவாளர் கற்பனை வழியாகத் தோன்றித் தமிழ்மண்ணில் பரவியுள்ள முள் வேல மரம் போல் பரப்பப்பட்ட ஒரு மரம். அது, விண்ணகத்து மரமாம். அதனை அடைதல் பெரும் பெறலாம்; அவர் வேண்டுவன வெல்லாம் கிட்டுமாம்! இக்கதையைக் கேட்ட திருவள்ளுவர் மெய்யாகவே கண்காணக் கற்பகம் ஒன்று வீடுதோறும் பெண் வடிவமாக இருக்கவும் அதனை உவந்து போற்றமாட்டாப் போலிப் பிறவியர் உளரே என எண்ணினார். அதனால் கற்பைத் தன்னகத்தே கொண்ட மகளிரே கற்பகம் என்றார்.

அக்கற்பகம், குடும்பத்தின் தேவை, விருப்பு, வேண்டுதல் என்பவை எல்லாமும் உணர்ந்து எவ்வொன்றும் குறைவுபடாமல் செய்து குடிநலம் காக்கும் பெருமையது. அக் கற்பகம் குடும்பத்திற்கு வாய்ப்பது அரிது. வாய்த்து விட்டால் அக்குடும்பத்திற்கு இல்லாத நலங்கள் என எவையும் இல்லை. அப்படி வாயாவிட்டால் அக்குடும்பத்திற்கு என்ன என்ன வளமாக வாய்த்திருந்தாலும் அவை வாய்த்ததாகுமா? என்றார் அக்குறள்;

“இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை.”

என்பது.

## 3. பெண்ணே அமிழ்து

அமிழ்து என்பதையும் புனைவாளர் இட்டுக் கட்டிப் பரப்பினர். பாற்கடல் என்பது ஒன்று; மந்தரம் மலை மத்து; வாசுகி பாம்பு; தேவர் ஒருபக்கம்; அசுரர் ஒரு பக்கம் நின்று கடைய அமுதம் வந்தது என்றனர். அதனை ‘அப்படிப் போடுடா தமுக்கு’ என்னும் தலையாட்டிகள் ஏற்றனர்.

திருவள்ளுவர் அறிவறியா இவர்களைக் கண்டார். கண்காண உண்ணும் நீராகவும் உண்ணும் உணவாகவும் உயிரும் பயிரும் வளர்க்கும் வான் மழை அல்லவோ அமிழ்து என எண்ணினார். அதனால்,

“வானின்று உலகம் வழங்கி வருதலால், தான் அமிழ்தம் என்றுணரல் பாற்று” என்றார்.

அவ் வான்மழை ஒப்பக் குடும்பத்தின் தேன் மழையாய்த் திகழும் மகளிர் அமிழ்து அல்லவோ என்பதை உணர்ந்து,

“வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி”

என்றும்,

"உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்"

என்றும் கூறினார். அவ்வளவில் அமையாராய், அமிழ்தம் தந்த அமிழ்தாக வாய்த்த குழந்தைகள் இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் உண்டு பெற்றோர்க்கு ஊட்டும் உணவு அமிழ்து என்பதல்லவோ என்பாராய்,

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

என்றார்.

அமிழ்துக்கு ஓர் அரிய பெயர் சூட்டு விழா நிகழ்த்தினார் திருவள்ளுவர். அது 'சாவா மருந்து' என்பது.

அமிழ்து, அமுது, அமிர்து, அமுதம் எல்லாம் அமிழ்த்துவன? எங்கே வெள்ளத்திலா, புகையிலா, தீமையிலா – இல்லை! இன்பத்தில் அமிழ்த்துவன.

தாய் அமிழ்து; அவள் பேணுதல் அமிழ்து; அவள் கொடுப்பது அமிழ்து; அவள் ஊட்டுவது அமிழ்து! குடும்பத்தை இன்ப அமிழ்த நிலையம் ஆக்க வைத்த பெண்மைத்தாயே பேரமிழ்து! கண்காண வாய்த்த அமிழ்தைப் புறத்தே தள்ளி பொய்ப்புனைவாம் அமிழ்தைக் கட்டி அழலாமா என்பது வள்ளுவ வினா.

## 4. பெண்ணே வீடுபேறு

தம்முயற்சியால் தாம் இனிது வாழக் கட்டியது வீடு; வெளியுலகத் துயரில் இருந்து விடுபட்டு இன்பநிலை காண அமைத்தது வீடு; வழிவழியாக மக்கள் பெருகி உலக நலமோம்ப வாய்த்தது வீடு, இவ்வாறு க்ண்காண வீடு இன்பநிலையமாக இருப்பதை உணர்ந்து போற்றல்

உயர்ந்தவர் கடமை. உலக நலம் கருதுவார் செய்ய வேண்டும் செயல்முறை. ஆனால் இவ்வீடு வீடன்று; விண்ணகத்திலே தான் வீடு உள்ளது. அவ்வீட்டை அடைவதற்காக இவ் வீட்டையும், இவ்வீட்டு வாழ்வையும் வெறுத்து ஒதுக்குதல் வேண்டும் என்று வெறுப்பின் உச்சத்தில் நின்று பரப்பினர். அவ்வாறு பரப்பியவர்கள், தாமரைக் கண்ணான் உலகு (வைகுந்தம்) என ஒன்று இருப்பதாகவும் அதனை அடைந்து பெறும் இன்பமே வீட்டின்பம் என்றும், தாம் கட்டிய வீட்டில் அடையும் இன்பம் சிற்றின்பம் என்பது மட்டுமின்றிச் சிறுமை இன்பம் என்றும், இவர்கள் பேரின்ப வாழ்வை இழந்து போகின்றவர் என்றும் கூறினர். திருவள்ளுவர், இப் பொய்மைக் கருத்தை மக்கள் ஏற்கின்றனரே எத்தகைய அறியாமை என உணர்ந்தார். அதனால், ஒருவரை ஒருவர் விரும்பும் ஒப்புடைய காதலன் காதலியர் அடையும் இன்பத்திலும் தாமரைக் கண்ணான் உலகத்துக் காணலாம் என்னும் இன்பம் பெரிதாகக் கூடுமோ? அப்படி ஒன்று உண்டா, உண்டு என்று கண்டு வந்தவர் எவர், அவரைக் கண்ணாரக் கண்டவர் எவர், என வினாவின் மேல் வினா எழத்,

> "தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
> தாமரைக் கண்ணான் உலகு."

என்றார். வீழ்வார் – விரும்புவார். காதலர் காணும் இன்பத் துயிலுக்குக் கண்டறியாத வைகுந்தத் துயில் இனிதாமோ என்கிறார்.

> பாற்கடல் என்பது ஆண்பால் பெண்பால் கடலுக்கு இணையோ?
> அரவணை எனப்படும் பாம்புப் படுக்கை, காதலர்
> அரவணைப்புக்கு ஒப்போ?
> அறிதுயில் எனப்படும் உலகெல்லாம் அறிந்து கொண்டு
> துயிலும் துயில், காதல் இன்பியல் அறிந்த துயிலுக்கு நிகரோ?
>
> துயில் என்பது என்ன? துய்ப்பதற் கென்றே வாய்த்த இடம்
> தானே அது. துய் + இல் = துயில்.

புனைகதையில் எப்படிப் பொருத்தி மயக்கியுள்ளனர் என்பது புலப்படவில்லையா?

## 5. பெண்ணே விருந்து

"விருந்தே புதுமை" என்பது தொல்காப்பியம். புதிய புதிய சுவை விருந்துகளைப் படைக்கும் நா விருந்தா அது?

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புல விருந்து ஒருங்கே தருபவள் பெண்ணே! விருந்தாக இருக்கும் அவ்விருந்து பொறிவாயில் ஐந்தவிக்கும் பொய்தீர் ஒழுக்க நெறி நின்று, தன்னைக் கொண்டானையும் அந்நிலையில் நிலைக்க வைக்க வல்லாளும் அவள்!

அன்பால் கூடி அவ்வன்பை விரிக்கும் மகப்பேற்றைத் தந்து உற்றார் உறவு சுற்றம் சூழல் உலகு என விரிய வைக்கும் பண்பாட்டு விருந்துக்கு மூலவளாகவும் இருப்பவள் அவள்.

வெளிப்படச் சொல்லப்படும்,

"தேனொடு பால்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்."

என்னும் சுவை மட்டுமா? ஒரு காலத்து ஓரிடத்து ஐம்புல இன்பமும் ஒருங்கே தரும் பேற்றை அவள் தாங்கி இருக்க இயற்கை அவளை வைத்த பேற்றால்தான் அவனுக்கு அவளே உயிராகவும், அவளுக்கு அவனே உயிராகவும் உயிர் பகுத்துவைத்த மாட்சியும், அவ்வுயிரொடு உயிர் இணையத் தடையுண்டானால், உயிரைத் துறக்கவும் முடிவெடுக்க வல்ல துணிவாவதும் சான்றாம்.

"உடம்போ டுயிரிடை என்ன மற்றன்ன மடந்தையொடு எம்மிடை நட்பு" என்பதும் "நிலத்தொடு நீரியைந்தன்னார்" என்பதும் வள்ளுவங்களாம்! நாச்சுவைக்கு மட்டும் விருந்தோ பெண்மை விருந்து?

## 6. பெண்ணே மருந்து

"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து."

நோய்கள் பலவகையால் ஆவன; அவற்றுக்கு மருந்து வகைகளும் பலவகையால் ஆவன; பெண்ணியலால் உண்டாம் நோய் எது? அது தீர்க்க வல்ல மருந்து எது?

நோயைத் தந்த அதுவே நோயைத் தீர்க்கும் மருந்துமாம் என்பது விந்தையில் விந்தையாம்.

"இருநோக் கிவள்உண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கு ஒன்றந்நோய் மருந்து."

மருந்து என்பது விருந்தில் உயர் விருந்தாம் அமிழ்தையும் குறிக்கும். அதற்குச் சாவா மருந்து என்பது வள்ளுவம். அச்சாவா மருந்தாக இருப்பதாலேயே உயிர்தளிர்க்க வைக்கும் அமிழ்தாக அவள் இருப்பதை வள்ளுவம் சுட்டியது.

## 7. பெண்ணே தெய்வம்

பெண்மையின் உயர்வுகண்ட தமிழர் தாய்த் தெய்வ வழிபாடு கொண்டனர். உயர்வாக மதிக்கும் மண்ணும், நீரும், கலையும் திருவும் ஆற்றலும் பிறவும் பெண் தெய்வமாகவே போற்றினர். நிலமகள், வையைத் தாய், கலைமகள், திருமகள், மலைமகள், கொற்றவ்வை என்றெல்லாம் கொண்டனர். "முயற்சி திருவினை ஆக்கும்", "செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்". பெண்ணைத் திருவாகவும், செய்யவள் ஆகவும் காட்ட வில்லையா? தெய்வத்தை வழிபடாளாய்க் கணவனை வழிபாடு செய்பவள், வழிபடத்தக்களாக அவனால் வழிபடத் தக்கவளாக ஆகிவிடுகின்றாள் அல்லவா! அவளுக்கு அவனும், அவனுக்கு அவளும் துணையாம் இணை என்றால் ஒருவரை ஒருவர் வழிபடல் இயல்பு என்பது வெளிப்படை தானே! தாயைத் தெய்வமாகக் கொள்ளல் தமிழ் மண்ணுக்கு வரத்துப் பொருளாகுமா?

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" அல்லரோ! அவளே குடும்பக் காவல் தெய்வமாதலால் தானே தற்காத்தாள்; குடிநலம்காத்தாள்; புகழ்ச் சொல் காத்தாள்!

## 8. பெண்ணே குருவர்

குருவர் இருவகை; தாமே கூறிக் கற்பாரை அறியச் செய்பவர் ஒருவகை; சொல்லாமலே தம்மியல் கண்டு பற்றிக் கொள்ளச் செய்வார் ஒருவகை. இவ்விரு வகைக் குருவருமாக அமைந்தவள் பெண்ணாம்.

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு."

என்பது கற்பிக்காமல் கற்றுக் கொள்ளுமாறு செய்யும் கட்டொழுங்கு.

ஒரு முகப்பட்ட ஒழுக்கத்தவளாக வாழும் உன் மனைவியைப் பார்; அவள் ஒழுக்கத்தை நீ பற்றிக் கொள். பற்றிக் கொண்டால் அவளுக்குரிய பெருமை உனக்கும் உண்டு என்பது இக்குறள்.

தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய் கொள்ளும் மகிழ்ச்சி மக்களை உயர்த்துகிறது!

தன் மகன் மதுவால் மயங்கித் திரியின் மகனென மதிக்காத தாயின் மாண்பு குடும்பத்தைப் பெருமைப் படுத்துகிறது.

முறை கேடாம் வழியில் வறுமையுற்ற மகனை மதிக்காத தாயின் மாண்பு அவனைத் திருத்தி நன்னெறியனாக்கத் துணையாகிறது!

இவ்வாறு இருவகைக் குருவர் நிலையையும் பெண்மை ஏற்கும் பெருமையாக வள்ளுவம் உவந்து உவந்து கூறுகிறது.

## 9. பெண்மை நிமிர்வு

கணவன் கூனனா, குறளனா? நெடியனா, வலியனா? எவனாயின் என்ன? அவன் தெருவில் நிமிர்ந்து நடையிட வேண்டுமா? அவன் நிமிர்ந்து நடையிடச் செய்பவள் அவனுக்கு வாய்த்த நன்மனையாளே யாம். எவர் முன்? பழித்துக் கூறித் திரிவதே வாழ்வாகிப் போனவரும் பழிக்க வாயெடுக்க மாட்டாமல் அடைத்து வைக்க வல்லவர் அவர் மனைவியரே!

"புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை."

இகழ்வார் முன்னும் பீடு நடையிட வல்ல வலிய முதுகெலும்பாக இருப்பவள் பெண்மைப் பிழம்பே என்பது எத்தகு பாராட்டு; எத்தகைய பேறு.

## 10. பெண்ணே மனைமாட்சி

குடும்ப நலம், குடும்ப வளம், குடும்பப் புகழ், குடும்பத் தொடர்ச்சி என்னும் குடிமைச் சிறப்பு எல்லாவற்றுக்கும் முற்றும் இடமாக இருப்பவள் பெண்ணே ஆதலால் இல் ஆள், மனை ஆள், அகத்து ஆள் என்னும் ஆளுரிமை வழங்கினர் முந்தையர். அவர்கள் எப்படி, அப்படியே குடி நலம் என்பதாம். இவற்றாலேயே இல்வாழ்க்கையை அடுத்த வாழ்க்கைத் துணை நல இறுதியில் மக்கட்பேற்றையும் இணைத்துத் தொடர் மாலையாய்,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்நலம் நன்மக்கட் பேறு"

என்றார் பொய்யா மொழியார்.

இங்குச் சுட்டப்பட்ட பத்தும் பிற உண்டாயின் அவையும் பெண்ணின் பெருமை விளக்கம் ஆகும்.

## 11. பெண்ணே பண்பாட்டுக் காப்பரணம்

1. பெண்ணின் பெருமை கோலோச்சுமிடம் தாய்மை. அத் தாய்மை சான்றோர் எனப் பாராட்டும் – சான்றோர் பாராட்டும் சான்றோர் எனும் மக்களைப் பெறவே விரும்பும்.

2. தான் பசிப்பினும் தகாச் செயலால் தன் மகன் / ள்/ பொருள் தேட ஒப்பாள்; பசியாற்ற நினையாள்.

3. குடிகாரன் – பழிகாரன் – என – சூதாடி என – மனம் ஒப்பாள்!

இப்பதினொன்றாம் பேறு தாய்மையே, பண்பாட்டுக் காவல் என்பதை விளக்கும் சான்றாம்.

# 6. திருக்குறளில் உடைமை

உடைமை என்பது உடையனாம் தன்மையாம். திருக்குறளில் உடைமை என்னும் பெயர் கொண்ட அதிகாரங்கள் பத்துள. அவை எக்காலும் நாம் விட்டு விடாமல் நம் உடைபோல் பேணிப் போற்ற வேண்டியவை. அவர் சொல்லாமல் விட்ட ஓர் உடைமை பொருள் உடைமை. ஏன் அதனை வள்ளுவர் உடைமை வகையில் சேர்க்காது விட்டார்?

பொருளைப் போக விடப் போக விடத்தான் உலகியக்கமாம். அதனைக் கொண்டிருந்தானுக்கும் ஆக்கமாம். அதனை ஓரிடத்தில் குவிந்து கிடக்க விடுவதோ, கட்டுக் கிடைப்படுத்துவதோ, கருமித்தனம் செய்வதோ உலகுக்கு மட்டுமன்று உடையானுக்கும் கேடாம்.

அதனால் அதனை உடைமை எனச் சொன்னார் அல்லர். ஆனால் அதன் பயன்பாட்டையும் சிறப்பையும் சொல்லாமல் விட்டாரும் அல்லர்.

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை"

"பொருளானாம் எல்லாம்"

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர்"

"செல்வரைச் செய்வர் சிறப்பு"

"பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்"

"இருளறுக்கும் எண்ணிய தேயத்துச் சென்று"

– என்றும் பிறவாறும் பாராட்டும் அவரே, அப்பொருள் தக்காரிடம் சேர்ந்து தக்க வகைக்குப் பயன்படாமையைக் கருதி,

"அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியன் மூத்தற்று"

"பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள." என்றார்.

வள்ளுவர் வகுத்த பத்து உடைமைகளையும் தனித்தனியே ஆய்தல் வேண்டும். அவை தனித்தனி நூலாதலும் வேண்டும். இவண் நாம் உடைமை என்னும் சொல்லாட்சியுடைய பன்னீரிடங்களை மட்டும் எண்ணுவோம்.

மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில் குடும்பக் கொடை வழியதே உலக நலம் என்பதைத்,

"தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்கிறார். உலக நலப்பாட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பங்களிப்பு உண்டு; அதனைச் செய்தல் ஆன்ம நேயக்கடன் என்பாராய் உரைத்தது இது.

அடுத்து அன்புடைமையிலே,

"அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு"

என்கிறார். "அன்பு என்னும் தாய் பெற்ற அருமைக் குழந்தையே அருள்" என்ற அவர், இங்கே "ஆர்வம் என்னும் குழந்தையை அன்பு ஈனும்" என்கிறார். அன்றியும், "அவ்வார்வமும் தாய்மைப் பேறெய்தி நட்பு என்னும் எண்ணரிய சிறப்பைத் தரும்" என்று கூறும் வகையால், அன்பைப் பாட்டியாக்குகிறார்.

"அன்பின் ஆக்கமே ஆர்வம்
ஆர்வத்தின் ஆக்கமே அரிய நட்பு"

என ஈருடைமைகளை இயைத்துரைக்கிறார்.

**விருந்தோம்பற் சிறப்பைக் கூறும் வள்ளுவர்,**

"உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை; மடவார்கண் உண்டு".

என்கிறார்.

"அடுக்கிய கோடி கொண்டும், அடுத்து வந்த விருந்தைப் பேணாதவன் உடுக்கவும் உண்ணவும் இல்லா வறியன் ஆயவனே! இவ்வறிவிலாச் செயல் பொருளியல் வாழ்வியல் மாந்த நேயம் என எவையும் அறியாத அறிவிலியர்க்கே உள்ள இயல்பாம்" என்பது இது கூறும் செய்தி.

ஈகை அதிகாரத்திலே உருகிநின்று கேட்கிறார் வள்ளுவர் :

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கண் அவர்."

"நாளெல்லாம் தேடிக்குவிக்க வல்ல திறம் இருந்தும் அப்பொருளைப் பயன்படுத்தும் அறிவைப்பெற்றிலரே! கொடுத்தலால் தாமுறும் இன்பமும், பெறுதலால் பிறருறும் இன்பமும் காணக் கொடுத்து வைத்திலரே! இவர் தம் கன்மனம் தான் என்னே! கற்பாறையும் கரும்புச் சாறன்ன நீர் கொண்டுளதே! கல் எத்தனை மணிகளைக் கொண்டுளது. கல்லைத் தோண்டிக் கன்னெய் கொளலாமே! இக்கடுமையன் நிலை என்னே! என்னே! என இரங்குகிறார் வள்ளுவர்.

துறவிலே வள்ளுவர் கூறும் **உடைமைக்கு இணை அவ்வுடைமையே** எனலாம்.

"இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து." என்பது.

பற்றற்ற துறவின் கடைப்பிடிச் சான்றுக்கு ஒப்பற்ற ஒன்று பொருட் பற்று அற்ற தன்மையே. அதனை உடைமையாகக் கருதின் பற்று அற்றேம் என்னும் எல்லாமும் அற்று, மீட்டும் பற்றை விடாப் பற்றாளன் என்பதையே உண்டாக்கும். துறவிக்குப் பொருட்டுறவே தலைத்துறவு" என்கிறார்.

கொடுங்கோன்மையில் வரும் உடைமை,

"இன்மையின் இன்னாதுடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்."

என்பது. அறமுறை அருள்முறை என்பவை அறியாக் கொடுங்கோலன் ஆட்சி செய்வனாயின் அவன் கீழ்வாழும் செல்வத்துள் செல்வமிக்கானும் வறியனுக்கு வறியனாகவே அல்லலுறுவான். **வறுமைக்கும் வறுமை தீயோன் ஆட்சியில் ஒருவன்** திருவுடையவனாக வாழ்வது என்கிறார்.

**ஊக்கமுடைமை** என்னும் அதிகாரத்தில் பிறந்த நாள் தொட்டு இறுதி மூச்சுவிடும் வரை உடனாகி உள்ளாகி ஒன்றாகி உயிராகி இருக்கும் ஒப்பற்ற உடைமையை வள்ளுவர் வழங்குகிறார். அது

"உள்ளம் உடைமை உடைமை"

என்பது. பொருளுடைமையே உடைமை என்பாரைத் தெளிவுறுத்தும் வகையில், "பொருளுடைமை, நில்லாது நீங்கி விடும்". என்கிறார். **ஒற்றை அடியில் இரட்டை மாங்காய் வீழ்த்த மூன்று உடைமைச் சொற்களை ஆள்கிறார்.**

'உழவு'த் தொழில் எல்லாத் தொழில்களுக்கும் தாய்த் தொழில். உயிர் காக்கும் தொழில்! அதனைச் செய்வார் ஏர் உழவர்! இவ்வுழவரைக் கொண்ட ஆட்சிப் படைப்பு. **சொல்லேர் உழவர், வில்லேர் உழவர், வாளேர் உழவர்** முதலியவை. வள்ளுவரே

"வில்லேர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை."

என்பார் (872). சொல்லேர் உழவர் செய்யும் நலம் 'நாநலம்'. அதனை,

"நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று."

என்பார். "நாநலமே நற் செல்வம்; அச் செல்வம் தரும் நலம் பிற எச் செல்வத்திலும் இல்லை" என உறுதி மொழிகிறார்.

தூது என்னும் அதிகாரத்தில் அன்புடைமை, துணிவுடைமை, பண்புடைமை ஆகிய மூவுடைமைகளும் தூதுரைப்பார்க்கு இன்றியமையாத உடைமைகள் என்கிறார்.

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு."

"தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு."

என்பவை அவை.

பேதைமை என்னும் அதிகாரத்தில் உடைமை ஒன்றைக் காட்டுகிறார் வள்ளுவர். அது 'கையொன் றுடைமை' என்பது.

கையில் உடைமையாக உள்ளது ஒன்றே ஒன்று; அதுவும் பாராட்டும் பரியதும் அன்று. ஆனால், அவ்வற்ப ஒன்று பேதையனிடம் இருக்கிறது அதனால், அவன் பார்வையில் வானினும் பெரியதாக அவனுக்குத் தோன்றுகிறது.

"மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்."

என்பது அது.

குடித்து மயங்கியவன் மேலும் குடித்தால் வெறிமயக்கம் தீரான். பேதையும் வையகத் தொன்று உடைமை பெறின் அவ்வுடைமை. வெறி அகலாது.

"அற்பனுக்குப் பவிசுவந்தால் அர்த்தராத்திரியில்
குடைபிடிப்பான்" என்பது பழமொழி.

நாணுடைமை அதிகாரத்திலே வரும் உடைமை, அப்பெயருடைமையாம் பேருடைமையே. அது,

"ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாண் உடைமை மாந்தர் சிறப்பு."

ஊணும் உடையும் எல்லா உயிர்களுக்கும் பொது வாயவை. ஆனால், மாந்தர்க்கு அவை மட்டும் உடைமைகள் அல்ல. நாணுடைமை என்னும் மாணுடைமையே தனிச்சிறப்புடைய உடைமையாம் என்கிறார். நாணுதல் என்பது என்ன எனின்,

"கருமத்தால் நாணுதல் நாணு"

என்பார் வள்ளுவர்.

உடைமைச் சொற்களாக வருவன கொண்டு
எண்ணிய எண்ணப் பதிவு இஃதாம்.

# 7. திருக்குறளில் ஒப்புரிமை

பனி கொட்டுகிறது; விடியற் பொழுது; ஒரு பெரியவர் சாலையில் நடக்கிறார். அவரைக் கண்ட ஒருவர் வணங்குகிறார்; கையை நீட்டி ஏதாவது காசு கேட்கிறார்.

பெரியவர் கை, சட்டைப் பையைத் துழாவுகிறது; ஏதும் இல்லை; "தம்பி, காசு ஏதும் கொண்டுவரவில்லை" என்கிறார்.

கைநீட்டியவர், மீளவும் இருகைகளையும் தூக்கி மிகப் பணிவுடன் வணங்குகிறார்.

"தம்பி, நான் சொன்னேனே! காசு கொண்டுவரவில்லை" என்றார். ஐயா, இப்பொழுது உங்களை வணங்கியது காசுக்காக இல்லை; என்னையும் ஒரு மனிதனாக நினைத்துத் தம்பி என்று உரிமையுடன் அழைத்தீர்கள் அல்லவா! அதற்காக வணங்கினேன் என்றார்!

ஒரு மனிதன், இன்னொரு மனிதன் தன்னை ஒத்தவனாக எண்ணி மதிக்க வேண்டும் என்பதையே பெருங்கொடையாக எண்ணுகிறான் என்பது இதனால் விளங்கும்.

ஒப்புரிமை இல்லா நிலைமையை ஒரு மானப்பிறவி ஏற்காது! ஒப்புரிமைக் கேட்டைத் தருவாரும் பெறுவாரும் ஆகிய இருவரும் மானக் கேடரேயாம்!

தோற்பைக்குள் அமைந்தது நம் உடற்கூடு! அத்தோற்பைக்கு 'மேல்' என்பது பெயர். மேனி என்பது அதன் வழியது; அத்தோலுக்கு ஒரு பெயர் 'உரி' என்பது.

'தோலை உரித்து விடுவேன்' என்பது ஒரு கடு மொழி! புலவுக்கடைக்காரர் தோலை உரித்துத் தொங்கப் போடுதலே தொழிலாகிப் போனவர். தொன்மம் சிவனை 'வாரணத் துரிவையான்' என்று கூறும்.

நிலக்கடலையைத் தோலை உரித்தே பருப்பை எடுப்பது கண்கூடு! நம் பிறவிக்கு முதல் உறுப்பு – தொன்மை உறுப்பு –தொல், 'தோல்'எனப்பட்டது. ஆதலால் 'தோல், உரி' என்பவை உரைப்பதென்ன? பிறப்பொடு வந்தது 'உரிமை' என்பதாம்.

விடுதலை எங்கள் பிறப்புரிமை என்றார் திலகர். தமிழ்ச்சொல் படைப்பாளன் அவ்வுரிமையைத் தன் படைப்புச் சொல்லாலேயே காட்டி விட்டான்! ஒப்புரிமை பிறப்புரிமை என்பதை உணர்ந்து போற்றும் பிறப்பே பிறப்பு. மற்றைப் பிறப்பு உயிருடைய பிறப்பு ஆகாது என்பதால் தான் திருவள்ளுவர்,

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்".

என்றார். அவ்வாறு ஒத்ததறிந்து போற்றாதான் உயிர் வாழ்வான் ஆகான். அவனைச்,

"சொத்தாருள் வைக்கப் படும்"

என்றார். உயிரோடேயே செத்தாரோடு அடக்கஞ் செய்ய வேண்டியவன் என்றது ஏன்?

அன்பால் பிறந்தவன்; அன்பொடு வாழவில்லை என்றால் அப் பிறவி என்ன பிறவி? அன்பின் வழியது உயிர்நிலை அல்லவா! அன்பிலா உடம்பு உடம்பா?

என்பு தோல் போர்த்த உடம்பே அன்றி, உயிருடைய உடலன்றே!

உயிரன்பு, உயிரை உடையவற்றை எல்லாம் ஒப்ப மதித்துப் போற்றும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

என்பதை உயிராகக் கொள்ளும். பிறப்பு வேறுபாட்டை எண்ணவே எண்ணாது. எண்ணின் அப்பிறப்பு மனிதப் பிறப்பு அன்று என்கிறது வள்ளுவம். "ஒழுக்கம் உடைமை குடிமை" என்று, ஒழுக்கமுடையரே உயர்குடியர் என்றார்.

ஒருவர் செய்யும் தொழிலால் உயர்வு தாழ்வு கொள்ளலாமா? எத்தொழில் உயர் தொழில்? எத்தொழில் தாழ் தொழில்! தொழிலில் ஏற்றத்தாழ்வு கொள்ளல் போலியானது!

அமைச்சுத் தொழில், நடுவர் தொழில், மருத்துவர் தொழில், பொறிஞர் தொழில், ஆசிரியர் தொழில் என்பவைக்குக் குறைந்ததோ, உழவுத்தொழில்?

உழவினார் கைம்மடங்கின் என்னாம்? துறவர் தாமும் வாழ்வாரா! மற்றை எவர்தாம் வாழ்வார்?

கைசெய்தூண் மாலையவராம் உழைப்பாளர் உழைப்பு இல்லையேல் ஊணுண்டா? உடையுண்டா? உறைவகம் உண்டா? உறுபொருள்கள் உண்டா? உழுதுண்டு வாழ்வார் தாமே வாழ்வார்க்கெல்லாம் வாழ்வார். அவர் தொழில் தாழ்வுற்றதா?

தெருத்தூய்மை பேணுவார் தொழில் தாழ்ந்ததா? அவர் பேணாவிட்டால் நாம் வாழ்வைத் துளியாவது பெற வாய்க்குமோ?

தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை; தொழில் செய்யும் வகையாலேயே உயர்வு தாழ்வு உண்டாகிறது! தொழில் செய் செம்மை, செம்மை இன்மை என்பவற்றைப் பொறுத்ததே உயர்வு தாழ்வு? தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை. அதனால் தான் வள்ளுவர்,

"சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்"

என்றார். செய்தொழில் வேற்றுமை என்பதைத் தொழில் செய் வேற்றுமை எனக் கொண்டு பொருள் காணின் தெளிவாம். மேலும்

"தவம் செய்வார் தம் கருமம் செய்வார்."

என்றதை எண்ண வேண்டும். தத்தம் கடமையைத் தகவாகச் செய்வார் எவரோ அவரே தவம் செய்வார் என்பதை எண்ணினால் கருமமாம் கடமையில் பெருமை சிறுமை இல்லை. அதனைச் செய்யும் வகையாலேயே பெருமை சிறுமையாம்

மேலும் தெளிவிப்பார் திருவள்ளுவர்:

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்."

என்பது அது.

மாற்றுக் காண் கட்டளைக் கல் தங்கத்தின் மாற்றையே காட்டும். அத் தங்கம் கொண்டு வந்தானையோ, கொண்டு வந்த வகையையோ, ஏறிவந்த ஊர்தியையோ கொண்டு மதிப்பிடுவது இல்லை. அதுபோல் அவரவர் செய்யும் செயலே பெருமை சிறுமைச் சான்று! அவர் செல்வம், செல்வாக்கு; பதவி பட்டம்; கருதி மதிப்பிடப்படா!

மேலே ஒருவன் இருக்க, கீழே சிலர் சிவிகை சுமக்க உலாக் கொள்வார் உளரே! இவர் செயல் அறச் செயலா?

உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அல்லவோ தவம்? அத்தவம் கருதா இவர் செயல் அவம்! அறமற்றது. என்பாராய்,

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை"

என்றார்.

கல்வியை மாந்தரின் ஒப்புரிமையாகக் கண்டவர் வள்ளுவர். அதனால் "கண்ணுடையர் என்பவர் கற்றோர்" என்றார். எண்ணும் எழுத்துமே கண் என்றார். ஆதலால் கல்வி ஒப்புரிமையைக்

கண்ணாலேயே காட்டினார் வள்ளுவர், கண்ணுடையவரும் கண்டார் அல்லரே! அதனால் அல்லவோ பிறப்பொப்பை வேற்றுமைப்படுத்தி, நான்காம் ஐந்தாம் பிரிவினர் கல்வி அறிவில்லாக் கடையராகவே இருக்க வைத்தனர். அந்நெறியை உடைக்கவே, "கண்ணுடையர் என்பவர் கற்றோர்" என்று ஒப்புரிமைக் கல்வியை உடைமையாக்கினார்.

வேதத்தைக் கற்றால், ஓதினால், கேட்டால், மனத்து வைத்தால் முறையே கண்ணைத் தோண்டல், நாவை அறுத்தல், ஈயத்தைக் காய்ச்சி விடல், பன்னிரு விரலச் சூடிரும்பைச் செலுத்தல் எனச் சண்டாளர்கள் வகுத்த கொடுமையை எண்ணிக்குமைந்து,

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை."

"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்"

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்."

"கேள்வியால் தோட்கப்"படும் செவியே செவி

என்றெல்லாம் வள்ளுவர் கூறிக் கேள்வி ஒப்புரிமை காட்டினார்.

இனிக் கொடையிலும் வேற்றுமை காட்டினர்; அந்நிலை வள்ளுவர் உள்ளத்தைச் சுட்டது. ஊர் ஊராய் வேதியர்க்குக் கொடை, பொற்பசு வழங்கல், வேள்விக் கொள்ளை என வேந்தரை வளைத்தமையைக் கண்டார். திருமங்கலம், மங்கலம், உத்தம தானபுரம், மகாதானபுரம், பிரமதேயம், சதுர்வேதிமங்கலம் என ஒரு கூட்டம் கொள்ளை அடிப்பதைக் கண்டு, "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" என்றார். மற்றவர்க்கு ஈவதைக் "குறியெதிர்ப்பை நீரதுடைத்து" என்றார். குறி எதிர்ப்பாவது கொடுத்ததற்கு ஒப்பப் பெறலாம். என்ன கொடுப்பதாக வேதியர் வேந்தரை ஏமாற்றினர் எனின், உங்களுக்கு வீடுபேறு -

சுவர்க்கம் - கிட்டும், எங்களுக்குக் கொடுத்தால் என்றனர். அதனால், வேதியரே உங்களுக்குக் கொடுப்பதே நல்வழிக் கொடை என்கிறீர்; கொடுத்தால் வீடுபேறு கிட்டும் - இன்ப உலகத்து என்றும் இருக்கலாம் என்று ஏமாற்றுகிறீர்; இவற்றை நம்பிக் கெடும் வேந்தரும் செல்வரும் உளர் என எண்ணியவராய்,

"நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று"

என்றார். மேலும்,

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்று கூறிக் கொடை ஒப்புரவும், கொடைப் பயன் ஒப்புரவும் காட்டினார்.

செல்வம் என்பது வினைப் பயனால் வருவது; வறியர் சிலரும் வளமையர் சிலரும் உளதாதல் அவர் தம் செய்வினைப் பயன் என்று மயங்கினர். செல்வம் முயற்சியால் வருவது.

"முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

இந்த வெளிப்படை அறிவு தானும் இல்லாராய்த் தம் உழைப்பை நம்பாமல் தலைவிதி என இட்டுக் கட்டியதை நம்பிக் கொண்டுள்ளனரே என்று வெதும்பியவராய்த் திருவள்ளுவர்,

"அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள."

என்றார். முயற்சியாளர் தமக்கெல்லாம் உழைப்புப் பயன் இல்லாமல் போகாது என்பாராய்த்,

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்." என்றார்.

தலைவன் தலைவி; கிழவன் கிழத்தி என ஒப்புரிமை கண்ட மண்ணில் பெண்ணை அடிமைப்படுத்தும் நிலை உண்டாவதை உணர்ந்தார் திருவள்ளுவர், அவனினும் அவளே உயர்ந்தவள் என்பதை,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள"-

என்றார்.

"இல்லதென் இல்லவள் மாண்பானால்"

என்றார்.

"ஒருமை மகளிரே போலப் பெருமை"

என்றார்.

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால்"

என்றார்.

"உறுதோ றுயிர் தளிர்க்க" வைக்கும்

என்றார். பெண்ணின் பெருமை பேசுதலால் பெண்மையை வளைத்த கொடுங்கோலை நிமிர்த்திச் செங்கோலாகக்கினார் வள்ளுவர். மேலும் பெருவிளக்கம் வேண்டுவார், திரு.வி.க. இயற்றிய

"பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை நலம்" பயில்வாராக.

பெண்ணை ஒப்புநிலையில் இருந்து ஒதுக்கியவர்கள் அவர்களுக்கு 'நாணம் அச்சம்' என்பவை வேண்டும் பண்புகள் என்றனர். நாணப் பண்பு பெண்ணுக்கு மட்டுமா வேண்டும்? ஆணுக்கு வேண்டாவா? நாணமில்லாப் பிறவி எப்பிறவி ஆனால் என்ன? மாந்தப் பிறவி அன்று; விலங்கு முதலாம் கீழ்ப்பிறவியே, என்பாராய்க்,

"கருமத்தால் நாணுதல் நாணு; திருநுதல்
நல்லவர் நாணுப் பிற."

என்றார்.

சான்றோர் சால்புகளுள் நாணுதல் மீச்சிறப்பினது என்பாராய்,

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மைஎன்று
ஐந்துசால் பூன்றிய தூண்."

என்றார். நாணுமை கொள்ளாமை ஆள்பவனுக்கு இழிமை என்றார். பொதுவாக, "நாணுடைமை மாந்தர் சிறப்பு" என்றார்.

அச்ச ஒப்புரிமையை,

"அஞ்சுவ தஞ்சாமை பேதமை; அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்."

என்றார்; ஒப்புரிமை அச்சத்தையும் நாணத்தையும் ஒருபாலுக்கு ஒதுக்காதீர் என்றார். அன்றியும்,

"அச்சமே கீழ்களது ஆசாரம்"

என்று இடித்துக் கூறினார்.

"அச்சம் இலார்க்கு அரணில்லை"

என்று தெளிவுறுத்தினார்.

வேதியரே அந்தணர் என்றனர்; அவர் செய்வேள்வியே தெய்வம் உவப்பது என்று பறை அறைந்தனர்.

அகம் தண்மையர் எவரோ அவரெல்லாம் அந்தணர்;

வருவிருந் துவப்ப ஊட்டுவார் எவரெவரும் வேள்வியர்;

ஓயாது ஒழியாது ஓதுவார் எவரும் பார்ப்பார்;

ஆருயிர்க்குப் பாதுகாப்பாம் ஒழுக்கத்தை உடையவர் எவரும் மறையவர்

– என்பவராய் வள்ளுவர் வகுத்துரைத்தார்.

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்."

"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பார், விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்."

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்."

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறை மொழி காட்டி விடும்."

எவர்க்கும் ஒப்புரிமைப்பட்டவற்றைச் சாதிமைப் படுத்தல் அறத்தின் கழுத்தை அறுக்கும் கொடுமையாம்.

இனிச்சமையம் என்பது பக்குவப்படுத்துவது. அன்னை சமைப்பது போலவும் சிற்பி சிலை வடிப்பது போலவும் செவ்வைப் படுத்துவது. அச்சமயத்தில் முட்டல் மோதலுக்கு இடமில்லை. ஆனால் தமிழகத்துப் புகுந்த புத்தம், சமணம், வேதியம் முட்டலாயின. மோதலாயின. ஆதலால் சமய ஒப்புரவு கருதிய பண்பியலையே திருவள்ளுவர் இறைமைப்படுத்தினார். அதனை எச்சமயம் சார்த்தியும் அழைக்கலாகாது என்பாராய், 'இறை' என்றும் 'முதல்' என்றும் 'பகவு' என்றும் குறிப்பிட்டார். தூய அறிவு, அகந்தண்மை, விருப்பு வெறுப்பு அறுதல் அறநெறியுடைமைக் கோட்பாடு என்பவற்றை அவ்விறையின் தன்மையாகக் காட்டினார்; இவ்வகையால் சமயப் பொதுமையொடு இறைமைப் பொதுமையும் கொள்ள வைத்தார்.

வழிபாடு என்பதையும் தெளிவாக்கினார்; நினைத்தல், பின்பற்றல், செயலாற்றல் என்பனவே வழிபாடு என்றார். ஆகவே வழிபாட்டிலும் ஒப்புரிமை வைத்தார்.

சடங்குகளை அடுக்கிக் காட்டின் சார்பாகி விடுமே!
ஓருருவம் ஒரு நாமம் ஒன்று மில்லான் என்றாரும்
ஆயிரம் திருநாமம் கூறினர் அல்லரோ!
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்றவரும் அத்தடம் மாறியதுண்டே!
நினைப்பவர் மனமே கோயில் என்றவரும் கோயிலை வலம் வந்தனர் அல்லவா?!
ஊனுடம்பு ஆலயம் என்றவர்க்கு ஆலயம் அமைந்துள தன்றோ!

இறையிலிக் கொள்கையை வைத்தவரை இறைநிலையில் வைத்து விடவில்லையா?

"சார்பு உணர்ந்து, சார்பு கெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்."

என்றவாறு சார்பு கடந்த சால்புப் பொதுமையை எப்பாலும் போற்றியதே முப்பாலாம் திருக்குறள் ஒப்புரிமை என்க.

# 8. திருக்குறளில் செயல்வீறு

உன் உழைப்பால் - உறுதிப்பாட்டால் - ஊக்கத்தால், ஊழையும் வெல்லலாம் என்பவர் திருவள்ளுவர்.

"என் குடியை எழுச்சி மிகச் செய்யப் போகிறேன் என்று நீ பாடுபட்டால் நீ வழிபடும் தெய்வமும் வரிந்து கட்டிக் கொண்டு வந்து உன்முன்னே நின்று உன் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு முன்னே போகும்" என்பவர் திருவள்ளுவர்.

"உடைமைகள் என்பவற்றில் எல்லாம் உயர்ந்த உடைமை உள்ள முடைமை" என்பவர் வள்ளுவர்.

அவர் கூறும் செயல் வீறு படிமானப் பெருமையுடையது.

"அடி அடியாக ஏறி, ஏற அரிய மலைமேல் ஏறி, எட்டா முடியைத் தொட்டுத் துலங்கலாம்" என வழிகாட்டி அன்று, வழிகூட்டிச் செல்பவர் வள்ளுவர்.

"தெரிந்து செய்!
வலிமை அறிந்து செய்!
இடம் அறிந்து செய்!
காலம் அறிந்து செய்!
தெளிந்து செய்!
சுற்றத்தோடு எண்ணிச் செய்!
மறவாது செய்!
இடையீடு இன்றிச்செய்!
இடுக்கண் பாராது செய்!
வெற்றி உறுதி என்று செய்!"

என அதிகார வரிசையாகச் சொல்கிறார்!

"என்ன தவறு செய்துவிட்டேன் என நீயே பின்னர்
எண்ணும் செயலைச் செய்யாதே!"

"ஆக்கம் கருதி முதலிழக்கும் செயலைச் செய்யாதே!"

"அஞ்சத் தக்க – வெறுக்கத் தக்க – செயலைச் செய்யாதே!"

"பழிபாவம் வரும் செயலைச் செய்யாதே!"

"ஈவிரக்க மற்ற செயலைச் செய்யாதே!"

"தன்னலப் பேராசையால் செயலில் ஈடுபடாதே!"

"அரை குறையாகச் செய்யும் செயலைத் தொடாதே!"

"எதிர் வரும் விளைவை எண்ணாமல் செய்யும் செயலைச்
செய்யாதே!"

– என மறுதலைப் பகுதியையும் சொல்கிறார் அவர்.

ஏனெனில்,

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்."

என இருபாலும் சுட்டிச் செயலாற்றச் சொல்வதன் விளக்கம் வேண்டும் அல்லவோ!

இனி,

வினை செயல்வகை (68)
வினைத் திட்பம் (67)
வினைத்தூய்மை (66)

என மூன்று அதிகாரங்களை முழு முழுமணிகளாகச் செயல் வீறுக்குப் படைத்துள்ளார்! தூய வினையைச் செய்க! ஊக்கத் தொடு செய்க! செய்யும் வகையால் செய்க! வெல்க என்கிறார்.

**வினைத்தூய்மை**

வினை நல்லதாக இருந்தால் அது வேண்டுவ எல்லாவற்றையும் தரும்.

ஆதலால், புகழ் தருவதும் நலந் தருவதும் அல்லாத செயலைச் செய்யாதே!

எத்தகு இடருற்ற போதும் இழிவாம் செயலைச் செய்ய நினையாதே!

முன் செய்து பின்வருந்தும் செயலைச் செய்யாதே!

தாயின் பசிதீர்க்கவும் தவறாம் செயலில் தலைப்படாதே!

சான்றோர் மதிக்கும் செயலை மட்டும் செய்க!

பிறரை வருத்தித் தேடிய ஆக்கம், நீயும் வருந்தப் போயே போகும்!

வஞ்ச வழியால் எடுத்த செயலை முடிக்க முயலாதே!

- இவை வினைத் தூய்மைக் குறள்களின் பிழிவு.

"அழக் கொண்ட எல்லாம் அழப்போம்" "சான்றோர் கடிந்தவை செய்தால், முடிந்தாலும் பீழை தரும்"

- என்பவை சாவிப்புகளாம்.

வினையில் தூய்மை! வினையில் உறுதி!

இவை இரண்டும் பணத்தாளின் இருபக்கங்கள்!

செயலில் தூய்மை மட்டும் வெற்றிக்குப் போதாது, வினையில் உறுதி வேண்டும்! வினையில் உறுதி மட்டும் போதாது, செய்யும் செயலில் தூய்மை இருக்க வேண்டும்!

ஒன்றை விட்டு ஒன்று வாழா அன்றில் பறவைகள்
அன்னவை வினைத் தூய்மையும், வினைத் திட்பமுமாம்!

என்பவர் திருவள்ளுவர்.

## வினைத்திட்டம்

வினைத்திட்டம் அல்லது வினை வீறு எங்கே இருக்கிறது? கையிலா, காலிலா, கருவியிலா, துணையிலா - இவற்றில் இருப்பது உண்மை தான்! ஆனால் இவற்றினும் மேலாம் ஒன்றே வினைத்திட்பம்! அது மனத்திட்பம்! மற்றை எல்லாம் பிற திட்பங்களே!

மனத்திட்பம் இல்லான் எத்தனை எத்தனை திட்பங்களைப் பெற்றிருந்தாலும், அவை மனத்திட்பங்கள் ஆகா! வினைத் திட்ப உயிர்ப்பிடம், எடுத்த எடுப்பிலே வள்ளுவரிடமிருந்து துள்ளி எழுகின்றது! வினைத்திட்பம் என்பது மனத்திட்பம்!

மனத்திட்பம் உடையார்க்கு இடையூறு என்ன செய்யும்?
உடல்தளர்வு என்ன செய்யும்?
மனத்திட்பம் உடையார், இடைய்யூற்றுக்கு இடையூறு செய்பவர்!
தளர்ச்சியைச் சுட்டெரிக்கும் தாளாண்மையர்!

மண்ணா மணலா சரளையா கற்பாறையா தலைதாழ்த்திக் கொம்புயர்த்திக் காது விடைத்து முதுகு வளைத்து பாரம் இழுத்துச் சேரிடம் சேர்க்கும் பகட்டுக்கு இணையான பாரிய முயற்சியனுக்குத் தடை என்ன தடை?

எடுத்த செயலை இறுதிவரை எழுச்சியாக நிறை வேற்றுதல் அன்றி, இடை நிறுத்தம் என்பது இல்லா வீறுடையானுக்கு, வெற்றி வாய்க்காமல் வேறு என்ன வாய்க்கும்?

எவர் பாராட்டு? எவர் பரிசு? எதிர்பார்ப்பு இருந்தால் தானே! ஏமாற்றம் எவர்க்கு? எதிர்ப்பார்ப்பு உடையவர்க்குத் தானே! அதனால் எதிர்பார்த்தல் இல்லாத வீறுடையார், தக்கார் கண்ணில் கருத்தில் பாராட்டில் சீராட்டில் விடுபட்டுப் போவாரா? போகார், போகவே போகார்!

ஆளுமையுடையார் ஊரில் இல்லையா? நாட்டில் இல்லையா? உலகில் இல்லையா? ஒருவர் கண்ணில்பட்டால் போதும்! அவரால், ஓராயிரவர் கண்ணில்பட்டுக் கருத்தில் பதிந்து கண்டு கொள்ளப்படுவார்! எண்ணியறியாத எண்ணிலாப் பாராட்டுக்கும் உரியவரும் ஆவார்! ஆதலால்,

"வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்."

இம்மணிக்குறள், மலைமேல் விளக்காய் - கலங்கரை விளக்காய் - அவர்க்கு ஒளிகாட்டி வழிகாட்டி உயர்த்தும் ஒண்சுடர்க் கதிராய் விளங்கும்!

எண்ணியவர் எளியர் அல்லர்!
அவர் திண்ணியர்!
அவர் எண்ணியது திண்ணமாக வெற்றியன்றி
வேறொன்று தாராது!

தோற்றம் வேண்டும்! தோற்றம் வெளிப்பட விளங்கும் ஏற்றமே! ஆனால், தோற்ற மில்லாமை வெற்றிக்குத் தடையா? வீறு பெறத் தடையா?

தடையென்றால், "ஒரு சிறு புட்டி போதும்! கட்டிலோ தொட்டிலோ வேண்டா இச் சிறுகுழந்தைக்கு" எனப்பட்ட ஐசக் நியூட்டன் உலகப் புகழாளி ஆவானா?

உருசிய நாட்டிலேயே ஒரோ ஒரு அழகிலியைத் தேர்ந் தெடுங்கள் என்றால், தேர்ந்து எடுக்கக் கூடிய தோற்றம் உடைய காரல் மார்க்கசை, உலகிலேயே இப்படியோர் அழகியா எனப் பாராட்டத்தக்க சென்னி, காதலித்துக் கடிமணம் கொண்டு சொன்னிமார்க்கசு ஆகிய "பெண்ணின் பெருந்தகை" இருந்திருப்பாரா?

தேர் என்ன? வண்டி என்ன? ஆழி என்ன? சட்டம் கூடு என்ன? அச்சு என்ன? அச்சாணி என்ன?

**அச்சாணி இல்லாமல் எவ்வூர்தி ஓடும்?**

"உருவு கண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து"

என்பது வள்ளுவம்!

வினைத் திட்பம் உடையவர் அச்சாணி அன்னார்!அவர் கலங்கார்! மலைப்புறார்! சோரார்! குறியின் எல்லை கண்டே தீர்வேம் என்னும் குறிக்கோளாளியர் அவர்!

துன்பத்தை இன்பமாகக் காண்பார் முன், துன்ப மென்ன துன்பம்? வினைத் திட்பத்தை எதிரிட்டு வெல்ல எனைத் திட்பமும் இல்லை! அவர் வினைத் திட்பம் மனத்திட்பம் ஆம்!

**வினை செயல் வகை**

வினை செய்வார்க்கு வீறு எப்படி வாய்க்கும்?
எண்ணாமல் வினை செய்யத் துணிவார் அல்லர் அவர்!
எண்ணித் துணிவர்! திண்ணிதில் எண்ணித் துணிவர்!
என்ன என்ன எண்ணுவார் அவர்?

துணிவே அவர்க்குத் துணை!

துணிவு உள்ளதென்று வேண்டா வகையில் வீறி எழுவாரா? மாட்டார்! அமைந்து செய்வதை அமைந்து செய்வார்! விரைந்து செய்ய வேண்டியதை விரைந்து செய்வார்! அமைந்து செய்வதை விரைந்தோ, விரைந்து செய்வதை அமைந்தோ அவர் செய்யார்!

எடுத்த செயலை முடிக்க வேண்டியதே!
முடிக்க இயலாது; இயலவே இயலாது; என்னும்
நிலை உண்டானால், வீம்பாக - போலி மானமாக-
எடுத்ததை விடலாகாது என்பதற்காக அவர் அதனைத்
தொடரார்! தமக்குத் தக்க வகையில் மாற்றிக்
கொண்டு செயலை முடித்தே தீர்வார்!

எடுத்த செயலை இடைவிட்டு அதுகாறும் செலவிட்ட
உழைப்பை - பொருளை - வீணாக்கும் செயலை
ஒருநாளும் செய்யார்!

வினை வீறுடையார் எண் வகையாக எண்ணுவார்;
பொருளை எண்ணுவார்; கருவியை எண்ணுவார்;
காலத்தை எண்ணுவார்; இடத்தை எண்ணுவார்;
எடுத்த செயல் முறையை எண்ணுவார்; அதன் முடிவை
எண்ணுவார்; இடையூற்றை எண்ணுவார்; வினையைச்
செய்து முடித்தால் உண்டாம் பயனையும் எண்ணுவார்.

தன்னால் எடுத்த செயலை வீறுற முடிக்க வேறொருவர் துணை - அவ் வினையின் நுணுக்கங்களை யெல்லாம் தீர அறிந்த ஒருவர் துணையைத் - தேடிக் கொள்ளத் தயங்கார்! இச்செயல் **வினையால் வினையாக்கிக் கொள்ளும் வெற்றியாம்!**

இனி, ஒரு செயலை எடுத்துக் கொண்டால் அச் செயல் சார்ந்த வேறு சிலவற்றையும் எடுத்துக் கொள்ளல் வினையால் வினையாக்கிக் கொள்ளும் வித்தகமாகும்.

யானையைப் பிடிக்க முயல்வார், இன்னொரு பழகிய யானையைக் கொண்டே பற்றிப் பிடிப்பர்.

"வீட்டுப் புறாவைக் கொண்டு காட்டுப் பறவையைப் பிடித்தல்"

"வீட்டுக் காடையைக் கொண்டு காட்டுக் காடையைப் பிடித்தல்" எனப் பொது வழக்கு உண்டு. இதனை வள்ளுவர்,

"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையார்த் தற்று."

என்பார்.

இரண்டு திருமணங்கள் நிகழ்கின்றன. இரண்டிலும் கலந்து கொள்ள வேண்டும்! இரண்டும் எதிர் எதிர் இடத்தவை! இதனை நாலடியார் கவட்டை நெறி என்று கூறும்! போகும் போது ஒரு திருமணம்! திரும்பும் போது ஒரு திருமணம்! இரண்டிலும் கலந்து கொள்ளலாம் என்பார். அதுபோல் ஒரு செயலைச் செய்வார் அதன் தொடர்பான வேறு சில செயல்களையும் துணைச் செயலாகக் கொள்ளல் பலப்பல பயனாம்.

தென்னை மிகவுடைய உழவர்! அவர் எண்ணெய் ஆலை, எண்ணெய்க் கடை பிண்ணாக்கு வணிகம் கயிறு பின்னல் கயிற்று விற்பனை கீற்றுமுடைதல் தொழில் எனத் துணைத் தொழிலாக்கல்

ஆயவை மேற்கொள்ளல் வினையால் வின்னயாக்கிக் கோடலாம்! ஒன்றில் வருவாய் குன்றினும், ஒன்று நின்று நிமிர்த்துமே!

"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்தல்" 462

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்." 471

"எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல். 489

"எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின் 494

"வினைக்கண் வினையுடையான் கேண்மை"
தேடிக் கொள்ளல்! 519

"புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்" 538


"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்" 596

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு" 610

"அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்." 611

"வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்" 622

என்னும் குறள் மணிகளைக் கடைப்பிடிப்பார் செயல்வீறு, எய்தாத பேறுகளை எல்லாம் எய்துவித்தல் உறுதியாம்.


மீனாட்சி
புத்தக நிலையம்
ஆக்கம்: பெரியார்